உ

# இந்து சாதனம்

HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : விரோதி ஷ ஆவணி மீ 26 ஆம் உ (1889)

web : www.hinduorgan.com
e-mail : editor@hinduorgan.com

புத்தகம் : 122
இதழ் : 09

கர வருடம் வைகாசித் திங்கள் 1 ஆம் நாள்
(15.05.2011)

பிரதி விலை
ரூபா. 50.00

## புத்தூர் சிவன்

சிவா - சரணன்

பழைமை வாய்ந்த - கர்ண பரம்பரைக் கதைகளின்படி இராமாயண காலத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் அளவுக்கு மிகவும் பழைமை வாய்ந்த - ஊர் ! ஆனால், அதன் பெயரோ, புதிய ஊர் என்ற கருத்தைத் தருகின்ற புத்தூர் !

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கிழக்குப் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள பெரிய ஊராகிய புத்தூரைத்தான் குறிப்பிடுகின்றேன்.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"


என மணிவாசகர் பாடியதைப்போல், பழைமைக்குப் பழைமையாகவும் அதே வேளையிற் புதுமைக்குப் புதுமையாகவுமிருக்கின்ற எம்பெருமானாகிய சிவபெருமான் பழைமைச் சிறப்புக்களும், புதுமைப் பெயருங்கொண்ட புத்தூரிலே, மிகப் பழைய காலந் தொடக்கம் இன்றும் கோயில் கொண்டிருப்பது பொருத்தமானதுதான் !

தென்னிலங்கையில் இராவணனை வதம் செய்த பின்னர் தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த வழியில், இந்தப் பிரதேசத்தைக் கடக்கவேண்டிய நிலையிற் சிவபூசை செய்ய வேண்டியவேளை வந்ததை இராமபிரான் உணர்ந்தார்.

... பூயபு தமிழ்ச் சங்கம்



புத்தூர் சிவன் கோயில் முகப்புத் தோற்றத்துடன் உற்சவமூர்த்தி



கண்ணுக்கு எட்டிய தூரம்வரை, தண்ணீர் இல்லாத பிரதேசமாகவே அந்த இடம் காட்சியளித்தது. தண்ணீர் இல்லாமற் சிவபூசையை எப்படி மேற்கொள்வது ?

யோசித்துக்கொண்டே ஓரிடத்திற் தன் வில்லை ஊன்றினார். ஊன்றிய இடத்தில் தண்ணீர் "தளதளத்தது". பூசையை நிறைவேற்றிவிட்டு இராமபிரான் அவ்விடத்தை விட்டகன்ற போதிலும், அவருடைய தேவையை நிறைவேற்ற வந்த தண்ணீர் அதே இடத்தில் வற்றாத ஒரு நீர் நிலையமாகி அதை வளப்படுத்தத் தொடங்கிவிட்டது.

புத்தூர் மேற்கில் புத்தூர் – சுன்னாகம் வீதிக்கு அண்மையில் இன்றும் நாம் காணும் 'நிலாவரை' யின் தோற்றம் சம்பந்தமான கர்ணபரம்பரைக் கதை இது !

தெட்சிண கைலாச புராணத்திலே, இலங்கையிலுள்ள சிவத்தலங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் "நவ சைலேஸ்வரம்" என்பது புத்தூர்ச் சிவன் கோவிலையும், அந்தத் தலத்துக்குச் சமீபத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் வற்றாத நீரூற்று, நிலாவரையையும் குறிப்பிடுவதாகச் சிலர் கொள்வர்.

காலம் காலமாக எவ்விதத் தடைகள், தலையீடுகள் இன்றி ஏதாவதொன்று நிலைத்து நிற்கவேண்டும் என விரும்புவோர், "சூரிய – சந்திரர் இருக்கும்வரை நீடிக்கவேண்டும்' என அழுத்துவதுண்டு. அதன்படி சிந்திக்கும்போது, நிலா (சந்திரன்) இருக்கும் வரை, இந்த நீர்நிலையமும் இருக்கும். இருக்கவேண்டும் என்பதைத்தான் " நிலா வரை" என்ற பெயர் குறிக்கின்றது எனக் கொள்ளலாமோ ?

இப்போதைய புத்தூர்ச் சிவன் கோவிலுக்கும் நிலாவரைக்கும் இடையிலுள்ள தூரம் முக்காற் கிலோ மீற்றருக்கும் குறைவானதே. இக்கோவிலின் தீர்த்தோற்சவம், சமீப காலம்வரை நிலாவரையிலேயே நடைபெற்றது. சுவாமி எழுந்தருளுவதற்கு உபயோகிக்கப்பட்ட வாகனங்கள், மிகவும் பழுதுற்ற நிலையில் இப்போதும் இக்கோவிலின் வாகனசாலையில் இருக்கின்றனவாம். குடியிருப்புக்கள் கூடியதாலும் வேறு சில சூழ்நிலை மாற்றங்களாலும் இப்போது தீர்த்தத் திருவிழாவுக்காகச் சுவாமி அங்கு எழுந்தருளுவதில்லை.

பிற்காலத்தில் நிலாவரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய சிவாலயமே "நவ சைலேஸ்வரம்" என்ற பெயரை இப்போது கொண்டுள்ளது.

உலகின் ஆதி மதமாக இருந்தது இந்து சமயமே என்பதும், பௌத்தம் வருவதற்கு முன் மிகப் பழங் காலந்தொடக்கம் இலங்கை முழுவதும் இந்து சமயமே அனுட்டிக்கப்பட்டதென்பதும், பக்கச் சார்பற்ற ஆராய்ச்சியாளர்களாலும் அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகள்.

காணிகளின் விபரங்கள் பதியப்பட்டுள்ள தோம்புகளில், புத்தூரிலிருந்த காணிகள் பெரும்பாலானவற்றுக்கு உரிமையாளர்களாகப் பிராமணர்களே இருந்தனர் என்ற உண்மை காணப்படுகின்றது. ஆகவே, ஒன்றுக்கு மேற்பட்ட சிவாலயங்களும் இங்கே இருந்திருக்கும் என ஊகிப்பது தவறாகாது. பதினாறாம் நூற்றாண்டில் இங்கு வந்த போர்த்துக்கீசர் தம் சமயத்தைப் பரப்பும் திட்டத்தின் ஒரு பகுதியாக, இங்கிருந்த இந்து ஆலயங்களைத் தரைமட்டமாக்கினர் என்பது வரலாறு.



பெரியதும் சிறியதுமான ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களைத் தாம் இடித்தழித்ததாகப் குவெய்றொஸ் பாதிரியாரின் குறிப்பொன்று கூறுகின்றது. இந்துக் கோவில்களை இடிக்கவும், கத்தோலிக்க மதத்தைப் பரப்பவும் யாழ்ப்பாணத் திலிருந்து புறப்பட்ட போர்த்துக்கீசப் படையொன்று புத்தூரைத் தாண்டிச் செல்வதற்கு மூன்று நாள் எடுத்தது என "இலங்கையிற் கிறிஸ்தவம்" என்ற நூல் கூறுகின்றது.

இந்தச் செய்திகள் எல்லாம் புத்தூரில் ஒன்றுக்கும் மேற்பட்ட சிவாலயங்கள் இருந்ததையும், இந்து சமயம் ஆழமாக வேரூன்றி இருந்ததையும் உறுதிப்படுத்தும் சான்றுகளாகக் கொள்ளப்படத் தக்கவை.

சிவன் கோவிலிற் காணப்படும் கல்வெட்டுச் சாசனம், அக்கோவில் 17ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பதை உறுதிப்படுத்துகின்றது.

இவற்றுடன், பல்லவர் காலத்திலே தென்னிந்தியாவில் ஏற்பட்ட இந்து சமய எழுச்சியின் சிறப்பம்சமாக நாடெங்கிலும் கோவில்கள் பல கட்டப்பட்டதையும், அண்மை காரணமாக அந்தப் பண்பாடு இலங்கையிலும் பரவியதையும், கோவில் அதிக அளவில் இந்நாட்டிற் கட்டப்படுவதற்குச் சோழராட்சி உத்வேகம் அளித்ததையும், நாம் சேர்த்துப் பார்த்தால், இந்த நாட்டிலே முதன்முதலிற் கோவில்கள் கட்டப்பட்ட பிரதேசங்களுள் ஒன்றாகப் புத்தூரையும் கருதலாம்.

போர்த்துக்கீசருக்குப் பின்னர் வந்த ஒல்லாந்தரின் சமயக் கொள்கையில் வெறித்தனம் பெருமளவிற் குறைந்திருந்தது. அந்தக் காலத்தில் வீரகத்தியார் சிதம்பரநாதர் என்ற சைவப் பெருமகன் ஒருவர் புத்தூரில் வாழ்ந்து வந்தார். அவரிடமிருந்த பெருந் தொகையான மாடுகளை ஏழைச் சிறுவன் ஒருவன் மேய்த்து வந்தான். ஒரு நாள் மாலைப் பொழுதில், வழமையாக அவன் மாடு மேய்க்கின்ற இடத்துக்கண்மையில், கிழவி ஒருத்தியை அந்தச் சிறுவன் கண்டான். கையிலிருந்த பொல்லை ஊன்றியபடி, புல்வெளிக்குப் பக்கத்தில் இருந்த பிரப்பம் பற்றைக்குள் அந்தக் கிழவி போய்க்கொண்டிருந்தாள். முன்னர் ஒருபோதும் அவன் காணாத அந்தக் கிழவி, மாலை மயக்குகின்ற அந்த வேளையில், பிரப்பம் பற்றைக்குள் தனியாக நடந்து சென்றது அவனுக்கு அதிசயமாக இருந்தது! தான் கண்ட காட்சியைத் தன் எசமானுக்குச் சொன்னான்.

உண்மையை அறிந்து கொள்வதற்கு இறைபக்தியை இதயத்தில் நிறைத்திருந்த சிதம்பரநாதர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகவில்லை. இறைவன் அடியார்களுடன் தொடர்பு கொள்வதற்கு அடிக்கடி உபயோகிக்கும் ஊடகத்தின் மூலம் – கனவின்மூலம் – அன்றிரவே அவருக்கு உண்மையை உணர்த்தினான். சிறுவன் குறிப்பிட்ட கிழவி, அவன் வர்ணித்த கோலத்திலேயே அவருடைய கனவிற் காட்சி அளித்து, உடனடியாக அவர் நிறைவேற்றவேண்டிய பணியை வலியுறுத்திவிட்டே மறைந்தாள்.

"பிரப்பம் பற்றைக்குள் பலா ஒன்று முளைத்து வருகின்றது; அந்தப் பலாவில் நான் இருக்கிறேன்; நீதான் என்னை ஆதரிக்க வேண்டும்"

கனவுக் காட்சியிற் கடுகளவும் கற்பனையோ கதையளப்போ இல்லை என்பதை; பற்றைக்குளிருந்து எட்டிப் பார்க்கத் தொடங்கிய குட்டிப் பலா ஒன்று வெட்ட வெளிச்சமாக்கியது.



ஊர் மக்களுடன் சேர்ந்து அந்த இடத்தைத் துப்புரவு செய்தபோது, பழைய கோவிலொன்றின் இடிபாடுகள் இருந்ததைச் சிதம்பரநாதர் கண்டார். எனினும், அம்பாளின் ஆணையை நிறைவேற்றும் வகையில் "பத்தினி சீமா" என்ற அந்தக் காணியில், பலாவடியில், சிறிய குடில் ஒன்றில் அம்பாளை வைத்துப் பூசை, வழிபாடுகள் நடைபெற ஏற்பாடு செய்தார். 1680ஆம் ஆண்டில், இந்த அம்பாள் வழிபாடு ஆரம்பித்தபடியால் அங்கு காணப்பட்ட இடிபாடுகளுக்குரிய கோவில், அதற்கு முன்னலே கட்டப்பட்டிருக்க வேண்டும்!

அம்பாள்ஆலயத்தில் அலங்காரத் திருவிழாக்கள் நடை பெற்றதையும்; இறுதி நாளன்று அந்த ஆரம்ப காலத்தில் அம்பாளின் தீர்த்தத் திருவிழாவே நிலாவரையில் நடைபெற்றதையும் உறுதிபடக் கூறுபவர்கள் இன்றுமுளர்.

அம்பாளின் இந்த எளிமையான ஆலயத்துக்கு 1805ஆம் ஆண்டளவிலே சுண்ணாம்புச் சுவர் கட்டப்பட்டதால், அங்கே சிவன், விசாலாட்சி அம்பாள், விநாயகர், வைரவர் முதலிய விக்கிரகங்களும் வைக்கப்பட்டு வழிபடப்பட்டன.

மிகச் சிறப்பான முறையிலே பெரிய கோவில் ஒன்றைக் கட்ட வேண்டும் என்ற சங்கற்பத்துடன் 1876 / 77 இல் கட்டடப்பணிகளை மேற்கொண்ட பூதத்தம்பி சிற்றம்பலம் என்ற செல்வப்பிரபு, அதைச் சிவன் கோவிலாகவே கட்டத் தொடங்கினார் என்பது குறிக்கத்தக்கது. ஊர் மக்களின் காணி நன்கொடைகளும் ஏனைய, உதவிகளும் தாராளமாகவே கிடைத்தன. (அருகிலுள்ள பலாவடி அம்பாள் ஆலயத்தில் முன்னர் வைக்கப்பட்டிருந்த சிவன், அம்பாள், விக்கிரகங்கள் இங்கு கொண்டுவரப்பட்டன. 1896 இல் கோவிலுக்குத் திருக்குளம் ஒன்று உருவாக்கப்பட்டது.

1901 ஆம் ஆண்டில், கட்டட நிர்மாணப் பணிகளின் பொறுப்பைத் தன் தந்தையாரான சிற்றம்பலம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சிற்றம்பலம் மழவராயர், விநாயகர், வைரவர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் முதலிய பரிவார மூர்த்திகளுக்குத் தனிக் கோயில்களைக் கட்டினார்.

⟶

வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியஸ்வாமி கோவிலுக்கும் பிரதிஷ்டைக்கும், மழவராயரின் உறவினரான மு.சுப்பிரமணியம் பொறுப்பாக இருந்தார்.

1911ஆம் ஆண்டு சித்திரைச் சதயத்தில், அக்காலத்திற் பலரின் மதிப்புக்கும் கணிப்புக்கும் பாத்திரராயிருந்த சைவசித்தாந்த, வேதாகம ஞானபானு நீர்வேலி சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் அண்ணாசாமிக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக இருந்து முதலாவது மஹா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நிறைவேற்றினார்.

1919 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருப்பணியின் விளைவாகப் பஞ்சலிங்கங்கள், சனீஸ்வரன், சூரிய சந்திரர், தெட்சணாமூர்த்தி ஆகிய மூர்த்திகள் சிலா விக்கிரகங்களாகவும், தில்லை நடராசர், சிவகாமி அம்பாள், வள்ளி தேவசேனா சமேத சண்முகப் பெருமான், சந்தான கோபாலர் ஆகியோர் பஞ்சலோக விக்கிரகங்களாகவும் உருவாக்கப்பட்டு 1924ஆம் ஆண்டிற் பிரதிஷ்டை செய்யப் பெற்றனர்.

காலத்துக்குக் காலம் பல பிரதிஷ்டா கும்பாபிஷேகங்களையும், 1911, 1939, 1989 ஆகிய ஆண்டுகளிற் பூரணமான மஹா கும்பாபிஷேகங்களையும் கண்ட இக்கோவில் 9900சதுர அடிப்பரப்பில் தேவையான கட்டடங்கள், மண்டபங்கள், கோவில்கள் முதலியவற்றை உள்ளடக்கி 55 பரப்புக் காணியிற் கம்பீரமாக நின்று, கடவுட் சிந்தனையைக் கிளர்ந்தெழச் செய்து, கருணை ஒளியை வீசிக்கொண்டிருக்கின்றது.

கருவறையில் எளிமை தவழும் அழகுடன் லிங்க வடிவிற் காட்சி தருகின்றார் அருள்மிகு விஸ்வநாதஸ்வாமி. மகா மண்டபத்தில் நின்று வடக்கு நோக்கிப் பார்த்து அருள்மிகு விசாலாட்சி அம்பாளின் அருளுருவத்தைத் தரிசிக்கலாம். முன்னர் குறிப்பிட்ட பரிவார மூர்த்திகள் அனைவரும் முதலாம் வீதியில் அவரவர்கட்கென உருவாக்கப்பட்ட அருங்கலைக் கோவில்களிற் புனிதப் பொலிவுடன் காட்சி தருகின்றனர்.

"கோவில்" என்ற சிறப்புப் பெயருடைய சிதம்பரம் தில்லை நடராசர் கோவிலில் ஆனி உத்திரத்தை அந்தமாகக் கொண்டு பிரம்மோற்சவம் நடைபெறுவதைப் போன்றே இவ்வாலயத்திலும் ஆண்டுப் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன. பல்லாண்டுகளாகத் தேவஸ்தானப் பிரதம குருவாகப் பணியாற்றிவரும் சிவஸ்ரீ சாமி– சோமசுந்தரக் குருக்களின் பொறுப்பிலே நித்திய, நைமித்தியக் கிரியைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆரம்பம் முதல், நெருக்கமான உறவுபூண்ட குடும்பத்தினரே வழிவழியாகக் கோவிலின் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருகின்ற போதிலும், ஊரிலுள்ள பல்வேறு பிரிவினரையும் கோவிற் பணிகளில் இணைக்கின்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விளக்குகளுக்கு எண்ணெய் விடுவதற்கும், தீவர்த்தி பிடிப்பதற்கும், வீதிகளையும் மண்டபங்களையும் கூட்டித் துப்பரவு செய்வதற்கு – சுவாமிக்குக் குடைபிடிப்பதற்கு – வெள்ளை கட்டுவதற்கும் – மங்கலவாத்தியம் வாசிப்பதற்கும் – எனத் தனித் தனிக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, தருமசாதனம் செய்யப்பட்ட சில காணிகளும் அவர்களின் வருமானத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற விசேட நாள்களில் இவர்கள் அனைவருக்கும் புதிய உடை, படியரிசி, தெட்சணை முதலியன வழங்கப்படுகின்றன. கோவிற் காணிகளிற் செய்கை பண்ணுவோர், சுவாமி வீதிவலம் வரும்போதும், ஊர்வலம் வரும்போதும் தேவையான உதவிகளைச் செய்தல் வேண்டும்.

"எனது சொத்து சிவசொத்து" என அடிக்கடி கூறிவந்த திரு. மழவராயர் கந்தையா, அது சிவபெருமானுக்கும் பொதுமக் களுக்குமே உரியது என்பதைத் தெளிவுபடுத்தினார். தனது ஆன்மீக முன்னேற்றத்திற்காகக் கோவிலைக் கட்டியதாகவும், உலக நன்மை கருதிக் கல்விக்கூடத்தை ஏற்படுத்தியதாகவும் அவர் சொன்னவை கவனத்திற்குரியவை. கோவில் வருமானத்திற் செலவுகள், சேமவங்கி வைப்பு என்பன கழிய மிகுதி இருந்தால் மட்டுமே அதனைத் தன் சந்ததியார் எடுக்கலாம் என்றும், வருடாந்தர வரவு செலவுக் கணக்கு விபரம் மாவட்ட நீதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவும், அவற்றிற் பிழைகள் காணப்படின் திரஸ்திகள் நியமனச் சட்டத்தின்படி, சட்ட நடவடிக்கை எடுக்க நீதிபதிக்கு அதிகாரம் உண்டு என்றும், அவர் தன் தர்மசாதனத்திற் குறிப்பிட்டு, கோவிலுக்குரிய சொத்து யாராலும், எவ்விதத்திலும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தார்.

தன் தந்தையார் (மழவராயர்) சேர்ந்துவைத்த நிதியைப் புண்ணிய வழிகளிற் செலவிட்ட பெருமையும், தானதர்மம் செய்த பெருமையும் திரு. கந்தையா அவர்களைச் சாரும். தமிழகத்திலே மூவேந்தர் வளர்த்த தமிழையும் சைவத்தையும், இலங்கையிலே ஆறுமுக நாவலர் காத்த சைவத்தையும் தமிழையும், அவரின் பின்னர் இக்கால சந்ததியினர் அறியும்படி செய்த பெருமை திரு. கந்தையாவைச் சார்ந்தது. ஆறுமுக நாவலரின் யாழ்ப்பாணத்துக் கந்தபுராண கலாசார பரம்பரையிற் தோன்றிய அமரர் மழவராயர், தன் மகன் கந்தையா மூலம் பெரிய புராண கலாசாரம் வாழ, வளர வழி வகுத்தார். அறிவாலயம், அரனாலயம், அன்னசத்திரம் அமைத்து, பெரியபுராண வழி நின்று பெரும்பணியாற்றினார். அறுபத்து மூவர் குருபூசை செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்த பெரு வள்ளலார் அவர் எனச் சோமாஸ்கந்தப் பாரம்பரியத்திலே வளர்ந்த பண்டிதர் ச. சுப்பிரமணியம் கூறியவற்றை நினைவூட்டுவதுடன் இக்கட்டுரையை நிறைவு செய்வது பொருத்தமானதாகத் தோன்றுகின்றது. நீதியான முறையில் உழைத்த பணத்தை அதிக எண்ணிக்கையுடைய பொதுமக்களின் கல்வி– ஆன்மிக மேம்பாட்டுக்காக நேர்மையாகச் செலவிட்ட இக் கோவிற் தர்மகர்த்தாக்கள் ஏனைய தர்மகர்த்தாக்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்வர் என்பது திண்ணம்.

# சமயம் ஒரு வாழ்வியல் 29

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

வாழ்க்கையில் ஒரு சீர்மையைச் சமய நடைமுறைகள் தருகின்றன. ஒரு செயற்பாட்டைத் தொடர்ந்து செய்யும் பயிற்சி வழிபாட்டு நடைமுறைகளால் எமக்கு வந்து சேருகிறது. குறிப்பாக அவசரமான உலக வாழ்க்கைக்கு இத்தகையதொரு பயிற்சி மிகவும் இன்றியமையாதது. தொழில் நுட்பமும், விஞ்ஞானத்தின் துரிதமான வளர்ச்சியும் மனிதனை இன்று அல்லற்பட வைத்துள்ளன. தொடர்பாடற் சாதனங்கள் பெருகிவிட்ட போதும் மனிதன் குறித்த செயலைக் குறித்த காலத்திற் செய்ய முடியாமல் திணறுகிறான்.

ஆனால், நமது முன்னோர்கள் காலத்தின் கடப்பையும் பெயர்ச்சியையும் வழிபாட்டு நடைமுறைகளால் ஒழுங்காக அறியும் ஆற்றல் பெற்றிருந்தனர். காலை, மாலை, மதியம், இரவு எனப் பொழுதின் வேறுபாட்டைத் துல்லியமாக உணர்ந்து செயற்பட்டனர். காலையும் மாலையும் கடவுளை வணங்கும் முறைமையை ஏற்படுத்தி ஒருநாளின் செயற்பாட்டைச் செய்வதற்கு ஒரு வரையறையை ஏற்படுத்தி வாழ்ந்தனர். இறைவழிபாட்டுடன் எந்தக் கருமத்தையும் தொடங்கவேண்டும் என்றதொரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தனர். இக்கட்டுப்பாடு தலைமுறையினரிடம் தகுந்தபடி கையளிக்கப்பட்டது.

இணைத்துவிட்டனர். 'கூழானாலும் குளித்துக்குடி' என்ற முதுமொழி உணவு உண்பதற்கு முன்னர் நீராட வேண்டுமென வற்புறுத்தியது.

வழிபாட்டில் நீராடல் இணையும் பாங்கினை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களும், மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களும் நன்கு விளக்கியுள்ளன. திருக்கோயிற் சூழலிற் கேணி, குளம், ஆறு, கடல் போன்ற நீர்நிலைகள் இருந்தமையால் வழிபாட்டிற்குச் செல்வதற்கு முன்னர் நீராடிச் செல்வதற்கு வாய்ப்பாக இருந்தது. முற்காலங்களில் மக்கள் பொதுவான நீர்நிலைகளிலேயே நீராடினர். தூய்மை என்பது புறத்தூய்மை, அகத்தூய்மை என இருவகைப்படுமென வள்ளுவர் விளக்கியுள்ளார்.

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத் தூய்மை
வாய்மையான் காணப்படும்." (குறள்: 298)

உடம்பு நீரால் தூய்மையாகும். உள்ளம் உண்மைபேசுவதால் தூய்மை பெறும். உடலும் உள்ளமும் தூய்மையாக இருந்தால் இறைவன் பற்றிய சிந்தனையும் தெளிவுபெறும்.

**காலத்தின் அருமையைப் பலர் உணராமலே வாழ்வது கவலையளிக்கின்றது. நீராடல், திருநீறு அணிதல், உணவுண்ணல் முதலிய எல்லாமே குறிப்பிட்ட காலத்திற் செய்யப்படுவதை வரையறுத்துள்ளதன்மூலம் மனிதரின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்குச் சைவசமயம் வழிகோலியுள்ளது.**

இன்று இத்தகையதொரு திட்டமிட்ட செயற்பாடு நமது வாழ்வியலிற் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இளையோர் உள்ளத்திற் பொழுதைப் பற்றிய சிந்தனையே கிடையாது. உணவு, உடை, உறக்கம், உறையுள் என்ற மனித வாழ்வியலின் முக்கியமான விடயங்களிற்கூட எதுவிதமான ஒழுங்கும் இல்லை. சமயம் கூறும் தூய்மை பற்றிய உணர்வு இன்றியே வாழ்வு நடக்கிறது. வழிபாட்டில் இணைந்த 'விரதம்' என்னும் புலனடக்கப்பயிற்சியும் இளையவருக்கு இன்று இல்லை. கிடைப்பதை உண்டு உறங்கல் என்ற புதிய வரையறை ஒன்றை மேற்கொண்டே இளந்தலைமுறை செயற்படுகிறது. அவர்களை ஆற்றுப்படுத்தும் பணியில் முதுமையும் பங்கு கொள்வதில்லை. மூத்தோர் வழிகாட்டலின்றி எமது அடுத்த தலைமுறை காட்டுவாசிகள் போல நடமாடித் திரிகிறது.

தூய்மையால் அழகும் பொலிவும் ஏற்படும் என்பதைச் சமயம் பல்வேறு நிலைகளில் உணர்த்தியுள்ளது. வெப்பமான காலநிலையில் எமது வாழ்வுச் சூழ்நிலை அமைந்திருப்பதை நமது இளந்தலைமுறை உணர்வதில்லை. நாள்தோறும் நீராடிய பின்னரே உணவு உண்ணவேண்டும் என்ற ஒரு நியதியை எம்முன்னோர் கடைப்பிடித்து வந்தனர். அதனால் நீராடலை வழிபாட்டுடன்

நீராடும்போது எந்நேரம் நீராடவேண்டும்? எப்படி நீராட வேண்டும்? என நமது முன்னோர் வரையறை செய்துள்ளனர். மேற்குத் திசையை நோக்கி நின்று நீராடக் கூடாது என்ற நம்பிக்கை இருந்தது. கிரகங்களும் நட்சத்திரங்களும் கிழக்கிலிருந்து மேற்குத் திசையாகப் பூமியைச் சுற்றி வலம் வருவதாகச் சாஸ்திரம் கூறுகிறது. அவற்றிலிருந்து வரும் காந்த சக்தியானது பூமியைச் சுற்றி வலம் வருகிறது. மேற்குத் திசைநோக்கி நாம் நீராடி எழும்போது அது எமது முதுகுப்புறத்தில் படியும். ஆனால் கிழக்குத் திசை நோக்கி நீராடி எழும்போது நமது இதயம் அடங்கியிருக்கும் முன்பாகத்தில் உடலுக்கு நன்மை தரும் காந்தசக்தி படிய வாய்ப்புண்டாகிறது.

நீராடிய பின் திருநீறு அணியும் வழக்கமும் இருந்தது. அவ்வழக்கம் இப்போது அருகி வருகிறது. நீராடும்போது உடலின் மூட்டுகளில் ஈரம்படிந்து பல நோய்களை ஏற்படுத்தலாம். அதைத் தடுப்பதற்கு நீராடியபின் ஈரமான திருநீறு அணியப்படுகிறது. எமது சமயம் உடல் நலத்தையும், உளநலத்தையும் பேணும் நடைமுறைகளைக் கொண்டிருப்பதை எமது இளம் தலைமுறைக்கு எடுத்துரைப்பது எமது கடனாகும்.

# மேன்மைகொள் சைவநீதி

குமாரசாமி சோமசுந்தரம்

**"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" உலகம் என்பது அங்குள்ள உயர்ந்தோரையே குறிக்கும் என்பது தமிழ்ச் சான்றோர் அழுத்தம் திருத்தமாக அடிக்கடி கூறிவரும் உண்மையாகும். சிந்தனை, சொல், செயல்களிற் சிறந்து மேனிலையில் இருப்பவர்களே உயர்ந்தோர். "உலகம் இன்று சுருக்கிவிட்டது" எனச் சொல்லப்படும்போது, உயர்ந்தோரின் தொகை குறைந்துவிட்டது என நாம் கவலைப்பட வேண்டுமே தவிர நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி "காலத்தையும் இடத்தையும் சுருக்கிவிட்டது" என நினைத்துப் பெருமைப்படக்கூடாது. "கடவுள் ஒருவர் இருக்கிறார்" என்பதிற் பூரண நம்பிக்கையில் அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் நாம் நடந்து கொள்வது நம்மை மேனிலை அடையச் செய்யும் என்பதைக் தெளிவாக்குகின்றார் தேசிய கல்விநிறுவனத்தின் முன்னைநாட் பணிப்பாளர்களுள் ஒருவரான கட்டுரையாசிரியர்.**

மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தூயநற் சமயமேயாகும். எமது சமயம்: சைவசமயம்; தத்துவம், சைவசித்தாந்தம். சமயம் என்பது நல்வாழ்வுக்கான பாதை, வழி, நெறி, மார்க்கம் எனப்பொருள்படும். எனவே, சமயத்தை மறுப்பவர்கள், சமயச் சார்பின்மையை வரித்துக் கொள்பவர்கள் தூயநல் வாழ்க்கையை வாழ மறுப்பவர்கள் ஆகின்றனர், சைவம் ஒரு வாழ்க்கைநெறி. சைவசமயம் வேறு, வாழ்க்கை வேறு அல்ல. சமயமே வாழ்க்கை; வாழ்க்கையே சமயம் என்பதை எவர் உணர்ந்து, தம் வாழ்க்கையைச் சைவநெறியில் இட்டுச் செல்கிறாரோ, அவரே உண்மைச் சைவசமயி ஆவர். அவ்வாறு செய்யத் தவறுபவர், சைவத்தைப் போர்வையாக்கி, அதனுள் மறைந்தொழுகும் வேடதாரி மாந்தர்கள் ஆகிவிடுகின்றனர். அத்தகையவர்களை அதிபாதகர் என நாவலர் கூறுவார். உட்பகை, வெளிப் பகையை விடப் பொல்லாப்பு மிக்கது. மேன்மைகொள் சைவநீதி, தலைகீழ் ஆக்கப்படாது, பாதுகாக்கப்படவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளமை உணர்தற்பாலது. சைவம்: சிவம் சம்பந்தப்பட்டது. சிவம்: அன்பு, நீதி, தூய்மை சம்பந்தப்பட்டது. "அன்பே சிவம்" என்கிறார் திருமூலர். "நீதியே சிவம்" என்கிறார் மாணிக்கவாசகர். சிவத்தை ஆராதிப்பது என்பது: "அன்பு, நீதி, தூய்மை, உண்மை, அகிம்சை, அமைதி, என்னும் சிவப்பண்புகளை வாழ்க்கையில் ஆராதித்தலும் ஓம்புதலும் ஆகும். இதனைக் கருத்திற்கொண்டு சைவ வாழ்வு வாழ்பவர்களே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் ஆகின்றனர். சைவம்: மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக விளங்கும் தூயநற் சமயம் என்பதிற் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது.

**கடவுள் உண்டு**

" கடவுள் " எனும் எண்ணக்கருவை முழுமையாக ஏற்று, அதற்கு முதன்மையும் வழங்கியிருப்பது, சைவசமயம். சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொள்வது சைவசமயம், கடவுள் ஒருவரே; அவர் பல மூர்த்தங்களை எடுத்துள்ளார். அதனால், பல நாமங்களால் அழைக்கப்படுகின்றார்; பல வடிவங்களிலும் காணப்படுகின்றார். எண்குணங்கள், மூவகைத் திருமேனிகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாமங்கள், பல மூர்த்தங்கள் சிவபெருமானுக்கு உள்ளன.

" ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலாற்கு
ஆயிரம் திருநாமம் பாடி நாம்
தெள்ளேணம் கொட்டாமோ"

–மாணிக்கவாசகர் –

சைவசமயத்திற் பலதெய்வ வழிபாடு காணப்படுகின்றது. இது தெய்வநம்பிக்கைக்கு வழிவகுக்கிறது. பக்தி வளர்கிறது. ஆத்திகப்பண்பு பெருகுகிறது. பல்வேறு தெய்வங்களை வணங்குகின்ற போதிலும், அனைத்தையும் சிவபரம் பொருளாகவே காணும் நிலைப்பாட்டினை உடையது சிவநெறி – சைவநெறி.

" யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே
மா தொரு பாகனார் தாம் வருவார் " – சிவஞானசித்தியார்

சர்வமும் சிவமே என்பது உணர்தற் பாலது. சைவசமய மரபின் தனித்துவம் இதுவேயாகும்.

கடவுள் ஒருவரே என்பதை ஏற்றுக்கொண்ட சைவர்கள் அவரே ஒப்பு, உயர்வு அற்ற பெருந்தலைவர் என்றும்; உலகத்திற்குக் கர்த்தா என்றும் பூரணத்துவம் ஆனவர் என்றும் கொள்வர். கடவுள் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்; அவர் சத்து சித்து, ஆனந்த மயமானவர். பரம்பொருள், மெய்ப்பொருள், மூலப் பொருள் ஆக விளங்குபவர். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களை உயிர்கள்மீது கொண்டுள்ள கருணையி னால், அவற்றின் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு இடைவிடாது நடத்துபவர். அக் கடவுள் இன்றி ஓரணுவும் அசையாது.

**கடவுளுக்கு நன்றி செலுத்தும் முறை:**

- கடவுளை மெய்யன்போடு வணங்கி வழிபடுதல்.
- மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் வாழுதல்.
- நின்றும், நடந்தும், இருந்தும், கிடந்தும் அவன் தாள்களை நினைத்தல்.

⟶

- கடவுளிற் பக்தி செலுத்துதல், ஆலயவழிபாடு செய்தல், புகழ் பேசுதல், பாடுதல்.
- குரு, லிங்க ,சங்கம வழிபாடு செய்தல்
- கடவுளை முன்வைத்துக் கருமங்களைத் தொடங்கி ஆற்றுதல்.
- கடவுளை விசாரித்து ஒப்புதல் பெற்றுச் செயலாற்றுதல்
- அனைத்துப் படைப்புக்களிலும் கடவுள் நிறைந்துள்ளார் என்பதை உணர்ந்து, எவ்வுயிர்க்கும் செந்தண்மை , அன்பு , கருணை பூண்டு ஒழுகுதல்.
- தனக்கு உற்ற துன்பங்களைப் பொறுத்தல்; உயிர்க்கு உறுகண் செய்யாமை.
- கடவுள் விரும்பியவற்றைச் செய்தல்; விலக்கியவற்றைச் செய்யாது தவிர்த்தல்.
- இன்பம், அமைதி, ஆனந்தம், வாழ்வில் வேண்டும் என்றால் ; கடவுள் உணர்வு, சிந்தனை என்பனவும் அறநெறி வாழ்வும் இன்றியமையாதன என்பதனை உணர்ந்து ஒழுகுதல்.
- சைவ ஒழுக்கம், சைவஆசாரம், சைவவிழுமியங்கள் என்பவற்றை நடைமுறை வாழ்க்கையில் அனுசரித்தல்.
- ஆன்மிகம் என்பது அற ஒழுக்கம், நன்னடத்தை, பிறர் நலம் பேணுதல், நீதிவழுவா நெறிமுறையில் வாழ்க்கையை இடுதல் என்பதை உணர்ந்து ஆன்மிக வாழ்வு வாழுதல்.

கடவுளைப் பற்றி "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்கிறார் அப்பரடிகள். மனத்தில் தோன்றும் சிந்தனைகள், எண்ணங்கள், உணர்வுகள்தான் பேச்சாக வெளிவருகின்றன. இதிலிருந்து பிறக்கின்ற கருத்து என்னவெனில்; கடவுளை நினைக்காத, சிந்திக்காத நாளெல்லாம் பிறந்தும் பிறவாத; வாழ்ந்தும் வாழாத, பயனற்ற வீணான நாட்களேயாகும் என்பதாகும்.

கடவுளை நினைப்பதும் , கடவுள் பற்றிப்பேசுவதும் கடவுள் விரும்பியவற்றையே செய்தலும் என்பது நல்லவற்றை , நன்மையானவற்றையே நினைப்பதும், பேசுவதும், செய்வதும் ஆகும். அவ்வாறு செய்தல், எமக்கு; பெருநன்மையும் பெருங்கருணையும் புரிகின்ற பரமபதியாகிய கடவுளுக்கு வழிபாடு செய்தலும் நன்றி செலுத்துதலும், ஆக அமைகின்றது.

கடவுள் என்னும் எண்ணக்கருவை ஏற்றுக்கொள்பவர் ,இவ்வுலகில் வாழும் நெறியறிந்து வாழ்வாங்கு வாழ்கின்றனர்; நல்ல வண்ணம் அமைதிபெற்று வாழ்கின்றனர். அவ்வாறு ஆன்மிக நெறியில் நிற்பவர்களை மனக்கவலைகள், துன்பங்கள் , நிம்மதிக்குலைவு என்பன அணுகா; இருள்சேர் இருவினையும் சேரா ; இன்பம் , அமைதி, ஆனந்தம் என்பன விட்டகலா; அவர்களுக்கு முத்தியும் சித்திக்கும்.

*" இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் "*

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான்

இது பற்றி ஆழ்ந்து சிந்தித்துத் தெளிந்து கொள்பவர்கள், கடவுள் என்னும் பரம் பொருளின் மெய்ப்பொருளை உணர்வர்.

*" மெய்ப்பொருள் காண்பது அறிவு"*

– திருவள்ளுவர்

மெய் எது, பொய் எது?; நன்மை எது? தீமை எது? என்பதைப் பகுத்து அறிந்துகொள்வதற்கான இயலறிவு மனிதர்களிடம் இருந்தும் அத்தகைய பகுத்தறிவைப் பறிகொடுத்துவிட்டு "இருகால் விலங்கு" களாகிவிட்ட மனிதர்களாகலேயே தற்காலத்தில், உலகு சீர்கெட்டு, அமைதி நீங்கப் பெற்றுக் கெடுகிறது.

**சைவசமய நெறியின் இன்றைய தேவை**

இன்றைய மனித சமுதாயத்தின் அறைகூவல்களாகவும், தீர்க்கப்படாத பிரச்சனைகளாகவும் காணப்படுகின்ற பலவற்றிற்கு மனித வாழ்க்கை முற்றுமுழுதாக உலகியல் மயமாக்கப் பட்டுவருதலும், வாழ்க்கையுடன் ஆன்மிகம் இணைக்கப் படாமையுமே காரணமாகும். ஆன்மிகம் ஆனது மனிதரில் நற்சிந்தனை, நல்லெண்ணம், இன்சொல், நற்பண்பு, நல்லொழுக்கம், நன்னடத்தை, நற்செயல் மற்றும் நல்லனவெல்லாம் மலர்ச்சி பெறுவதற்கு அனுசரணையாகவும் ஆதாரமாகவும் உள்ளது. உலகியலும் ஆன்மிகமும் இணைக்கப்பட்டாலே, வாழ்க்கைச் சிக்கல்கள், பிரச்சினைகள், சூழுரைகள், மனிதர்களிடம் குடிகொண்டுள்ள விலங்கினக் குணங்கள்; மனிதர்கள் குழுக்குழுவாகப் பிரிந்து பகை, பிணக்கு, போர், வன்முறைகள் என்பவற்றால் அடையும் துன்பங்கள், பொருளாதாரப் பலத்தைப் பெருக்கிக் கொள்ளப் பின்பற்றப்படும் குறுக்கு வழிகள், ஆரோக்கியமற்ற கடும் போட்டா போட்டிகள், சதிகள், வன்செயல்கள், அநீதிகள், இவற்றை ஊக்குவிக்கும் பேராசை, கடும்பற்று, சினம், பொறாமை, வஞ்சம் என்பன ஓரளவிற்கேனும் தணிக்கப்பெற்று, மனித சமுதாயத்தில் அமைதி, சாந்தி, நல்லிணக்கம், மனிதநேயம், ஐக்கியம், மனிதத் தன்மைகள், நல்லொழுக்கம், மகிழ்ச்சி என்பன நிலைபேறுகொள்ள வாய்ப்பு ஏற்படும். சைவநெறியிற் கடவுள் உணர்வும், அறநெறி என்ற வாழ்க்கை ஒழுக்க, ஒழுங்குப் பண்பாடும் சிறப்புற்றுக் காணப்படுகின்றன.

சைவநெறி ஆன்மிகத்தை வலியுறுத்தும் அதேவேளை உலகியல் வாழ்க்கையை அழுக்கு என்றோ, இழுக்கு என்றோ கூறி வெறுக்க அனுமதிக்கவில்லை, மாறாக, ஒன்றை மற்றொன்று பரஸ்பரம் வளம்படுத்தவும், மேன்மை பெறச்செய்யவும் சைவநெறி மனிதரை வழிப்படுத்தி நெறிப்படுத்துகின்றது. "உலகை ஒன்றாகக் காண்பதே காட்சி" என்ற ஒளவைப்பிராட்டியின் கூற்றும்" யாதும் ஊரே யாவரும் கேளிர் ; தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் கணியன் பூங்குன்றனாரின் மகுட வாசகமும் , சைவத்தமிழ்ப் பண்பாட்டின் அடித்தளத்தின் உரமும், வளர்ச்சியின் உன்னதமும் எத்துணை மேன்மையும் தூய்மை வாய்ந்தவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அதனாலேயே, *"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"* என்ற உலக நல வாழ்த்தும் ஒலிக்கத் தொடங்கியது. சைவநீதி, உலகியலையும் ஆன்மிகத்தையும் இணையச் செய்கின்றது. அதனால், மனித சமுதாயம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள், துன்பங்கள்,

⟶

அனர்த்தங்கள் என்பன தோன்றாமல் தடுக்கப்படுகின்றன அல்லது ஒருகால் தோன்றினாலும் தீர்வுகாண வழி ஏற்படுகின்றது. சைவநீதி வழுவா நெறிமுறையில் தம் வாழ்க்கையை இட்டுச் செல்பவர்கள், மேலோர், உயர்ந்தோர் என அழைக்கப்படுபவர்கள். அவர்கள் உலகியலை ஆன்மிக வழியில் நடத்துபவர்கள். அதனால் "மண்ணில் நல்ல வண்ணம்" வாழும் பெற்றியர் ஆக அவர்கள் விளங்குவர். ஆன்மிகம் சமயத்துடன் தொடர்புடையது. சமய நம்பிக்கை உடையவரிடத்தில் ஆன்மிகம் செழித்தோங்கக் காணலாம்.

*"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே"*

என இறைவனைப் போற்றுவது சைவசமய மரபு. ஆன்மிகம் பழைமையும் புதுமையும் நிறைந்தது. அது பண்பாடாக வளர்ச்சி பெறுகின்றது. பண்பாடு என்னும்சொல்: பண்படுத்தல், செம்மைப் படுத்தல், தூய்மைப்படுத்தல் என்னும் கருத்துக்களை உள்ளடக்கி யுள்ளது. பண்படுத்தல் அகம், புறம் இரண்டும் சார்ந்தது. பண்புடைமை ஆன்மீகம் தழுவியது. அதேவேளை மக்கள் வாழ்க்கையோடு இணைக்கப் பெறுவது. பண்புடைமை என்பது சான்றாண்மை. பண்புடையோர், சான்றோர். எனப்படுவர். அவர்கள் ஆன்மிகத்தைவாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டவர்கள் அன்பையும் அறத்தையும் வாழ்க்கையின் பண்பும் பயனுமாகக் கொள்பவர்கள். மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயற்றூய்மை என்பவற்றை வாழ்கையில் அனுசரித்து செம்மை வாழ்வு வாழ்பவர்கள்.

*"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு*
*ஐந்து சால்பு ஊன்றிய தூண்"*

– திருக்குறள்

இக் குறள் குறிப்பிடும் ஐந்து பண்புகளும் சான்றோர் சால்பு ஆகும். இதுவே ஆன்மிகம் தழுவிய சால்பும் ஆகும்.

*"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு"*

–திருக்குறள்

தீமைசெய்தவர்க்கும், மன்னித்து இனிய நன்மைகளையே அவர்களுக்குச் செய்பவர் சான்றோர், என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

*"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்."*

– திருக்குறள்

பண்புடையார், சான்றோர், ஆன்மிகம் ஓம்புவர், சிலராதல் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருப்பதனாலேயே, உலகம் உள்பொருளாக இன்னமும், அவர் பொருட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இல்லையேல், உலகம் அழிந்து போயிருக்கும் என்கிறது மேற்படி குறட்பா.

ஆன்மிகம் என்பது மானுட முழுமைத் தன்மைக்கு முயற்சி செய்யும் விழுமிய உளநிலைப் பண்பாகும். சைவசமயநெறி ஆன்மீகத்தை முதன்மைப்படுத்தும் வாழ்க்கை நெறியாகும்.

## ருத்ர மந்திரம்

ரிக், யஜுர், சாமம் என்ற மூன்று வேதங்களில் நடுவில் இருப்பது யஜுர் வேதம். இந்த வேதத்தின் நடுப்பகுதியில் அமைவது "ஸ்ரீ ருத்ரம்" எனும் மகா மந்திரம். ஸ்ரீ ருத்திரத்தில் நடுநாயகமாக அமைவது பஞ்சாட்சரம் எனப்படும் ஐந்தெழுத்து மந்திரமாகும். இந்த ஐந்தெழுத்துக்கு (நமசிவாய) இணையான மந்திரம் இல்லை என்பது சைவ சித்தாந்த நூல்களின் முடிவாகும். ருத்ரத்தைப் பாராயணம் செய்வோர் பஞ்சமா பாதங்களிலிருந்து விடுபட்டு ஆத்ம ஞானம் பெறுவர். உலக உயிர்கள் அனைத்தும் நலம்பெறும் ருத்ரத்தைத் தினமும் ஒருமனிதன் முறைப்படி சொல்வானேயாகில்; அவனுடைய அன்றைய பாவம் நீங்கிவிடுமென நூல்கள் எடுத்தியம்புகின்றன. கண்ணீரைத் துடைத்துச் சுக வாழ்வழிப்பவன் ருத்திரன். எனவே ருத்ர பாராயணம் செய்தால் தரித்திரம் என்பதே அணுகாது. ருத்ர பாராயணம் செய்யும் பேறு எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. வாய்ப்பற்றவர்கள் கோவில்களில் நடக்கும் ருத்ராபிஷேகத்தைத் தரிசித்துப் பயன்பெறலாம்.

- காசித்திருமடம் அதிபர் -
நன்றி தினமலர் 02. 04. 2011

# வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க

கயிலை மகா முனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்

**நிறைவாக**

சைவ நிறுவனங்களின் தலைவர்களில் முதன் முறையாகத் திருக்கயிலாய யாத்திரை மேற்கொண்டு "கயிலைக் குருமணி"யாக அருள் ஒளியால் பொலிந்தவர்கள், நம்மைச் 'சன்யாச ராஜயோகத்'திற்கு ஆட்படுத்தி ஆட்கொண்ட தருமையாதீனம் 25ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்கள் ஆவர். அவர்களின் கயிலை யாத்திரை விசேடங்கள் அறிந்த நாள்முதல் நமக்கும் அவ்வேட்கை தோன்றி, நாளுக்குநாள் பெருகிப் பேருரு எடுத்தது. ஆயின் கயிலாய யாத்திரை செல்ல அரசு ரீதியான தடை ஏற்பட்டுப் பல்லாண்டுகள் நீடித்தது. பின்னர் அத்தடை விலகியதும், சைவத் திருமடங்களின் தலைவர்களில் முதன்முதலாக 1982இல் கயிலாய யாத்திரை மேற்கொள்ள நமக்குத் திருவருள் கூட்டியது. அப்போதிருந்த காஞ்சித் தொண்டை மண்டல ஆதீனகர்த்தரும், பேரூர் அடிகளாரும், ஈரோடு அன்பர்கள் சிலரும் நம்மிடம் கயிலாய யாத்திரை விருப்பத்தைத் தெரிவித்ததின்பேரில் புது டில்லியில் உயர் பதவியில் இருந்த திரு. இராமையா அவர்களின் உதவியால், அவர்களுக்கும் அனுமதி கிடைக்கச் செய்ய நம்மால் இயன்றது.

கயிலாயத்தை நெருங்குகையில் மானசரோவர் ஏரிக் கரையில் மூன்று நாட்கள் ஒரு முகாமில் தங்கியிருந்தோம். அதுபோது பேரூர் அடிகளார் 'அவரவர்களின் விருப்பத்தைச் சொல்லுங்கள்' என்றார். நாம் 'திருமுறைகளைத் தலையில் சுமந்தபடி அனைத்துத் தலங்களுக்கும் யாத்திரை செய்து சிவ வழிபாடு செய்துகொள்ள வேண்டுமென்பதே நம் விருப்பம்' என்றோம். இதை ஈரோடு அன்பர் திரு. முனுசாமி அவர்கள் தாமெழுதிய கயிலாய யாத்திரை என்ற நூலிற் பதிவு செய்துள்ளார். அன்றும் சரி, இன்றும் சரி, என்றும், என்றென்றும் திருமுறைகளைச் சிரமேற்கொண்டு போற்றுவதில் நாம் இம்மியளவும் பின்னோக்கியதில்லை. ஓதிய மாத்திரையிலேயே பயன்தரும் திருமுறைகளைச் சடங்குகட்கு உட்படுத்துவது அதன் மதிப்பைக் குறைப்பதாக நாம் உணர்கின்றோம். ஆன்றோர் வாக்கும், அனுமதியும் இல்லாத இச்செயலைச் சமயப்புறகாக, நாம் உணர்த்தப்பட்டுள்ளோம்.

எம். எம். தண்டபாணி தேசிகருடன் முறையாகப் பண்ணுடன் திருமுறைகளைப் பயின்ற, நம் முன்னவர்களாகிய ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலங்கள்தோறும் சென்று திருமுறைகளைப் பண்ணொன்றப் பாடப் பயிலவும், ஸ்ரீ உருத்திரம் ஓதவும் பணித்தார்கள். இந்திமொழி கற்கவும், ஆங்கிலம் பேச, எழுதப் பயிலவும் பணித்தார்கள். மொழித் துவேஷம் வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்கள். அவ் அறிவுரை நம்மில் நன்றாகப் பதிந்தது. 'புறநெறி ஆற்றாது, அறநெறி போற்றி, நெறி நின்று ஒழுகுதிர்' என்று ஸ்ரீ குமரகுருபரர் சைவத் 'துறை அறிமாந்தர்க்குச் சூழ்கடன்' ஆகச் சொன்ன அருள்வாக்கை எழுத்தெழுத்தாகப் பின்பற்றுகிறோம்.

முன்னவரும், முதல்வரும், ஆசாரியப் பெருமக்களும் சொன்னவற்றை அன்றி, நாமாக எதுவும் சொல்வதில்லை. திருமுறைகளைப் புரோகிதப் பணிக்குக் கொண்டுசெல்ல முற்பட்ட தொடக்கத்திலேயே நாம் உரத்த குரல் கொடுத்திருக்க வேண்டும். கட்டுக்கோப்பான, திருமுறைப் பெருமை காக்கும் மரபுப் பணியை இனியும் நினைவுறுத்தாமல் விடலாகாது.

> 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்'

என்ற குறளமுத உரைப்படி இப்பொழுதாவது உரத்து உரைக்கத் திருவருட் சம்மதம் நேர்ந்தமையை எண்ணி மகிழ்கிறோம். ஓதினாலேயே இருமை நலன்களும் வாரிவழங்கும் வாரிதிகளான திருமுறைகளை இனியும் கிரியைகட்கு உட்படுத்தாவிட்டால், அநாதி சைவம், கேட்பாரற்ற அனாதையோ என அகிலத்தார் கருத இடம் ஏற்பட்டுவிடும்.

நாம் ஒரு கூட்டம் வைத்துள்ளோமே என்ற எண்ணத்தில் இருப்பவர்கள்.

> "ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
> போற்றினும் பொத்துப்படும்"

என்ற திருவள்ளுவ தேவரின் வாக்கை ஆழ்ந்து எண்ணிப் பார்க்க →

**திருமுறைகளைத் தலையிற் சுமந்தபடி அனைத்துத் தலங்களுக்கும் யாத்திரை செய்து சிவவழிபாடு செய்வதைத் தன் பெருவிருப்பாகக் கொண்டுள்ளவர் கயிலை மகா முனிவர். திருமுறைகள் அதிசக்தி வாய்ந்தவை என்பதை அழுத்திக்கூறும் சுவாமிகள், உரிய முறையில் திருமுறைகளை ஓதுவதும் உடனடிப் பயன்களை நல்கும் என்கிறார்கள். அடியார்கள் இறைவனுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பவை திருமுறைகள். திருமுறைகளை ஓதிச் சமயக் கிரியைகளைச் செய்யலாம் என்பது இவர்களுக்கு உடன்பாடன்று. "இந்து சாதனம்" 2011 தை இதழிலிருந்து வெளிவரத் தொடங்கிய இந்தக் கட்டுரை இந்த இதழுடன் நிறைவு பெறுகின்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்திருக்கு நமது நன்றியை மீண்டும் தெரிவிக்கின்றோம்.**

வேண்டும். உச்சியில் இருக்கவேண்டிய திருமுறைகளைத் தோளுக்கு வைத்தாலும் குறைதான் என்பதை அவற்றின் பேரில் கொண்டுள்ள பக்தி மேலீட்டால் நாம் உணர்த்த உணர்ந்துள்ளோம்.

கடமைகளை வகுத்தளித்து வழிசெய்வானும் அவனே: நிறைவேற்றம் செய்வானும் அவனே; நம் சிவனே!

திருமுறைகளின் மதிப்பைக் காப்பாற்ற அறிவுறுத்தும் பெருமான், அடியாருடன் கூடித் தல யாத்திரை செய்யும் பெரு விருப்பத்தையும் நல்கி ஈடேற்றுவித்தான். மயிலாடுதுறை குருஞானசம்பந்தர் இறை பணி மன்ற அடியார்களுடன் பாடல் பெற்ற தலங்கள், வைப்புத் தலங்கள் யாவும் திருமுறை சுமந்து ஓதித் தரிசித்தோம். திரு. ஊரன் அடிகள் தாமெழுதிய காசிமடம் வரலாற்றில் இதனைக் குறிப்பிட்டார். இதைப் பெருமைக்காக எழுதவில்லை. ' கயிலை மாமுனிவர் இலங்கையில் உள்ள இரு தலங்கள் (திருக்கேதீச்சரம், கோணமாமலை) இன்னும் வழிபடவில்லை' என அவர் அந்நூலிற் குறிப்பிட்டது திருவருள் நமக்குணர்த்திய குறிப்பாகவே கருதுகிறோம். திருக்கேதீச்சரம் தலத்தில் நாம் பூசனை நேரத்தில் வழிபடவில்லை; தனித்த நேரத்தில் வழிபட்டுள்ளோம். விரைவில் அக்குறை தீர்த்து இரு தலங்களிலும் வழிபாடாற்றிவர இறையருள் கூட்டும்.

இன்றுவரை நல்லெண்ணங்களையே தந்து வென்றேறச் செய்துவரும் பெருமான் திருமுறைகளின் பெருமை காத்தலாகிய மரபு காக்கும் வேட்கையையும் நிறைவேற்றுவர் என்பது நிச்சயம்.

திருத்தருமையாதீனம் 26ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்கள், முறையாக ஏழாண்டுகள் திருமுறைகளைப் பண்ணிசைகூட்டிப் பாடப்பயின்றவர்கள். திருமுறைகளைப் பாடும் பயிற்சி ஐந்தாண்டுகளாவது பெற வேண்டும். ஏழாண்டுகள் பயின்ற ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்கள், 'மனமே! திருமுறைகள் ஓதாய்' (ஓதுவாயாக!) என்ற ஸ்ரீ குருஞான சம்பந்தரின் அருள்வாக்கின் ஆதாரத்துடன் 'திருமுறைகள் கிரியைகட்கன்று' என அறிவிக்கிறார்கள். ஆதாரம், அனுமதி இல்லாமல் – சொல்லாமல் ஒரு துரும்பை அசைக்கக்கூட நம் சமயத்தில் நமக்கு அதிகாரமில்லை.

ஆண்டொன்றுக்கு முன்னூறு சிவாச்சாரியர்கள் ஆகமப் பயிற்சி முடித்து ஆகம பாடசாலைகளிற் சான்றிதழ்கள் பெறுகின்றார்கள். எனவே, ' சிவாச்சாரியார்கள் கிடைக்காததால், திருமுறைகளில் வேள்விகளும், வழிபாடுகளும் குடமுழுக்குகளும் செய்யுங்கள்' என்பது பொருந்தாது. தேவாரப் பாடசாலைகள் போதுமான அளவுக்கு இல்லை என்பதும், இருக்கும் பாடசாலைகளில் இப்பயிற்சிக்கு மாணவர்கள் சேர்வதில்லை என்பதும் உண்மை.

திருமுறைப் பற்றாளர்கள் எனத் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வோர், இதைப் பற்றிக் கவலைகொள்ளாமல், திருமுறைகளை வைத்துப் புரோகிதம் செய்யப் பயிற்சி தருகின்றோம் என்று அறிவிப்பதும், பல்கலைக்கழகங்களையும் அவ்வழிக்கு ஆற்றுப் படுத்துவதும் விநோதமாகும். அரசினுடைய பல்கலைக்கழகங் களினுடைய இசைக் கல்லூரிகளிற் பண்ணிசைத் துறைகளை அமைத்து ஊக்குவித்து, மிகப் பலரையும் அதிற் சேருமாறு ஆற்றுப்படுத்துவதே இன்றைய அவசியத் தேவையாகும்.

நெறிநின்று ஒழுகுவதால், வேத, ஆகம பாடசாலைகள் வளர்கின்றன. அவற்றிற் பயில்வோரின் எண்ணிக்கை பன்மடங்கு ஆகிறது. ஆகம பாடசாலைகள் அனைத்திலும் திருமுறை ஓதவும் பயிற்றுவிக்கப்படுவது மகிழ்வைத் தருகிறது. 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'. திருமுறைகளை மனம்போன போக்கிலெல்லாம் பயன்படுத்தும், நெறியல்லா நெறியையே நெறியாகக் கொண்டொழுகத் தொடங்கியபின் தேவாரப் பாடசாலைகள் அடைக்கப்படுகின்றன. பயில்வோர் பயிற்றுவிப்போர் தேடினும் கிடைக்கவில்லை.

'பாடினாற் பணம் குறைவு, தருப்பையை எடுத்தால்தான் தாராளமாக வரும்' என்று கணக்குப் போடுவர்கள், திருமுறைப் பற்றாளர்களும் அல்லர்; இறைபக்தியாளர்களும் அல்லர்; அவர்கள் ஒருவகை வணிகர்களே ஆவர்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், பரிபூரணம் அடைந்த தவத்திரு. குன்றக்குடி அடிகளார், 'திருக்கோயில்களில் திருமுறைகள் ஒலிக்க வேண்டும்' என்ற முழக்கத்தை அரசின் செவிகளுக்கு ஏற்றுவதற்கு அனைத்து ஆதீனங்களும், மடங்களும் ஒருமித்து எடுத்துரைக்க வேண்டுமெனக் கேட்டதின் பேரில் ஒரே குரலாக அது தெரிவிக்கப்பெற்று வெற்றிபெற்றது. ஆயினும், ஓதுவார்கள் கிடைக்கவில்லை என்பதே தற்போதைய குறையாக உள்ளது.

துறவியருள் ஒருமித்த கருத்து வேண்டும் என அவர்கள் உருவாக்கிய நெறி, தற்போது தடம் மாறுகிறது. சிதம்பரத்தில் நடைபெற்ற உலகச் சைவ மாநாட்டில் நாம் கலந்துகொள்ள இயலாத வகைக்குத் தொடக்கத்தில் நடைமுறைகள் அமைந்தன. பெருமான் அச்சூழலை மாற்றினார். மாநாட்டிலும் முதல் தீர்மானமாக, வேத, ஆகம, புராண, இதிகாச, திருமுறை நெறிகளைப் பின்பற்றுவது என முடிவெடுக்கப்பட்டது. சைவ ஆதீனங்கள், மடங்கள், தலங்களுக்குள் கருத்து வேறுபாடு வரின், அது மாறுபாடாக மாறாமல் இருக்க ஒன்றுகூடிப் பேசுவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அவ்விரு முடிபுகளுமே மதிக்கப்படாமல், ஆங்காங்கே பிறழுதல் நிகழ்கிறது என்பதால், நாம் முடிவெடுத்த கருத்துகளை மீண்டும் விவரித்து எழுத வேண்டியதாகிறது.

சைவத் தலைவர்களின் ஒற்றுமையை வலியுறுத்திப் பல்லாண்டுகட்கு முன்பே முதன்முதலாக அறிக்கை வெளியிட்ட நாம், இன்றும் 'அவ்வொற்றுமை ஒன்று மட்டுமே நம்மைப் பெருமைப்படுத்தும், சிறப்புக்களை மிகுவிக்கும்' என்பதில் உறுதியாக உள்ளோம்.

⟶

எதெதற் எதேது உரியதோ, அததற்கு அததைப் பயன்படுத்துவதே... மரபுப்படி – ஆட்சி ஆவணங்களின்படி, உச்சிமீது கொண்டாட வேண்டிய திருமுறைகளைக் கிரியைகட்கு ஆட்படுத்தலாகாது; அச்செயல் திருமுறைகளைத் தரம் குறைக்கும் செயலாகும்; அப்பெருமந்திரங்களை ஓதியே நலம்பெற்று உலகம் உய்வதாகுக! என்பது மட்டுமே நம் பெருவிருப்பமாகும்.

'திருமுறைகளை ஓதி வேள்வி செய்யக்கூடாதென்று, திருமுறைகளில் எங்கேனும் உண்டா?' என்று அறிஞர்கள் கேட்கிறார்கள். மிகப்பல பதிவகங்களில் 'ஓதவேண்டும், பத்தும் ஓத வேண்டும்' என வருவது கொண்டு, அது விதி என உணர்தல் வேண்டும். விதியை அவர்களே அருளிய பிறகு வேறெவ்வகையிலும் அதனைப் பயன்படுத்தலாகாது எனப் புரிந்துகொள்வது அழகு. அப்படிப் புரிந்துகொள்ளவில்லை யென்றால், திருமுறை ஓதி வேள்வி செய்யலாம் என்று எங்கு உள்ளது? ஆட்சி உண்டா? ஆசாரியன் யார்? என்று வினாக் கணைகள் தொடர்ந்து வருமே! இல்லை, இல்லை, இல்லை என்ற ஒரே பதிலைத்தானே ஓயாமல் சொல்ல வேண்டி வரும்! எண்ணிப்பார்க்க வேண்டாமா?

நமக்கு யாரிடமும் வெறுப்போ பகையோ என்றும் இருந்ததில்லை; இனி இருக்கப்போவதுமில்லை. 'அழிவந்த செய்யினும் அன்பு அறார்' என்ற நிலையிலேயே இருந்து,

*'அழிவினை நீக்கி ஆறுஉய்த்து, அழிவின்கண்*
*அல்லல் உழப்பதாம் நட்பு'*

என்ற திருக்குறளைத் தலையாய கட்டளையாகவே ஏற்றுப் பின்பற்றுவோம்.

*"அனுசயப் பட்டு அதுஇது என்னாதே*
*கனிமனத்தொடு கண்களும் நீர்மல்கிப்*
*புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்*
*மனிதரில் தலையான மனிதரே"*

(அப்பர் – திருக்குறுந்தொகை)

(அனுசயப்பட்டு – ஒருவரோடு ஒருவர் பகைமையுற்று; அது இது என்னாதே – அது நன்று இது தீது, இது நன்று அது தீது என்று மாறுபடாமல்; கனிமனத்தொடு – கனிந்த மனத்தொடு; தலையான மனிதர் – சிறந்த மனிதர்).

*'வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தின்*
*ஓதத்தகும் அறம் எல்லாம் உள ; தர்க்க*
*வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற*
*வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே'*

(திருமந்திரம் – வேதச்சிறப்பு–1)

(வேதத்தில் சொல்லப்படாத அறம் யாதொன்றும் இல்லை. மக்கள் ஓதி உணர வேண்டுவனவாய எல்லா அறங்களும் வேதத்திலே உள்ளன. அதனால், அறிவுடையோர் பலரும் வேதத்தை மறுத்துச் செய்யும் சொற்போரை விடுத்து, எல்லாச் சொல் வளமும் பொருள் வளமும் உடைய வேதத்தை ஓதியே வீடடையும் நெறியைப் பெற்றார்கள் – சி. அருணைவடிவேல் முதலியார்).

*'புறநெறி ஆற்றாது அறநெறி போற்றி*
*நெறிநின்று ஒழுகுதிர் மற்ற*
*துறையறி மாந்தர்க்குச் சூழ்கடன் இதுவே'*

(குமரகுருபரர் – சி.செ. கோவை)

(புறநெறி ஆற்றாது – அறத்தாறல்லாத நெறியில் நின்று செயல் புரியாமல்; துறை அறிமாந்தர் – தாம் ஒழுகும் வழி இஃதென அறிந்த அறிஞர்).

*"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!"*

–சிவ சிவ.

*முற்றும்.*

# இந்துசாதனம் – சந்தா விபரம்

**உள்நாடு**
தனிப்பிரதி : 50/–
ஆண்டுச் சந்தா : ரூபா 600/–

**வெளிநாடு**

| | | |
|---|---|---|
| Australia (AU$) | - | 35 |
| Europe | - | 25 |
| India ( Indian Rs) | - | 500 |
| Malaysia (RM) | - | 50 |
| Canada ($) | - | 35 |
| UK (£) | - | 15 |
| Other (US$) | - | 25 |

**காசோலைகள்**
Saiva Paripalana Sabai
Account No. 1090946
என்று எழுதப்பெறுதல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
கௌரவ முகாமையாளர்
**இந்துசாதனம்**
இல.66, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


**இந்து சாதனம்**
**Hindu Organ**
e-mail: editor@hindu organ.com

*கர ௵ வைகாசி மீ 1ஆம் உ (15.05.2011)*


# அரசியல் பிழைத்தோர்க்கு... !

பெற்றோர் சொற் கேட்கும் பிள்ளையாக – மணாளனின் மனம் கோணாது நடக்கும் மாதரசியாக – குருவின் முன் குனிந்து வணங்கி அவர் கொள்கைவழிச் செல்லும் சிஷ்யனாக –

அமைதியாக – அடக்கமாக மதுரை மாநகரை வலம் வந்து வளம் தந்து கொண்டிருந்த வைகைஆறு –

திடீரென்று ஒரு நாட் சீறிச் சினந்து – பேரிரைச்சலுடன் பெருக்கெடுத்ததும் –

வீடுகளை உடைத்து – வயல் வரப்புக்களை அழித்து – ஆடு மாடுகளை அள்ளிச் சுருட்டிக் கொண்டு அசுர வேகத்திற் கடலை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்ததும் –

நிகழ்ந்தவற்றைக் கேள்விப்பட்டு – நேரிற் சென்று நிலைமையை உணர்ந்த பாண்டிய மன்னன் –

'நமது ஆலவாய் அண்ணலின் ஆலயத்தில் , ஆண்டாண்டு காலமாக நடந்து வருகின்ற பூசை முறைகளில் குறைகள் ஏதாவது குறுக்கிட்டிருக்கின்றனவா?" –

"நீதி நெறியில் நடக்கின்ற நல்லவர்களின் நெஞ்சு புழுங்கும்படி, அவர்க்கு நான் தீதேதும் செய்து விட்டேனா?

எனத் தன்னையே குற்றவாளியாக்கும் வகையில் அமைந்த இரண்டு கேள்விகளை – அமைச்சர்களைப் பார்த்துக் கேட்டதும் –

ஆறு பெருக்கெடுத்ததற்கும் அரசனின் கேள்விகளுக்கும் என்ன சம்பந்தம்?

என மறுப்புக் கேள்வி கேட்காமல் –

சிறையில் வாடும் திருவடியாரான மாணிக்கவாசகப் பெருந்தகையை விடுதலை செய்யவேண்டும் என அவர்கள் பரிந்துரை செய்ததும் –

அவர் விடுவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட பின்னர் நாடு வழமைக்குத் திரும்பியதும், திருவாதவூரடிகள் புராணம் நம் சிந்தனையைத் தூண்டும் விதத்திற் தந்துள்ள சிறப்பான செய்திகள் !

மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும் கையிற் தனிச் சிலம்புமாகத் தன்முன்னே தோன்றிய கண்ணகி –

கொண்டு வந்த சிலம்பைக் கோபத்துடன் வீசியெறிந்து – தன் கணவன் கோவலன், கள்வனே அல்லன் என்பதை நிரூபித்ததைத் தொடர்ந்து –

நீதி பற்றி நிறையத் தெரிந்து வைத்த பாண்டிய மன்னன், தன்னையே நீதிபதியாக நியமித்துக் கொண்டு –

நீதி நெறியிலிருந்து தவறிய தன்னை – தானே கடுங்குற்ற வாளியாகக் கண்டு – தானே தனக்கு மரண தண்டனை விதித்ததும்

அடுத்த கணமே – அதே கொலு மண்டபத்திலேயே தானே தனக்களித்த தண்டனையை – தானே நிறைவேற்றியதும் –

தன் கணவனுக்குத் தான் உதவியாகவும் உடந்தை யாகவும் இருந்த வகையில் – கணவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைத் தானும் வரித்துக் கொண்ட பாண்டிமா தேவியும் தன் கணவனைப் பின் தொடர்ந்ததும் –

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், நம் நெஞ்சில் நிலைக்கும் வகையில் தந்துள்ள சிறப்பான செய்திகள் –

தர்க்க ரீதியாக நாம் பெறக்கூடிய சில தவறற்ற ஊகங்கள்

நாட்டிலே பேரழிவோ பெருந் தீங்கோ ஏற்படும் வேளைகளில் – அவற்றிற்குரிய பழியை அமைச்சர்கள் – அயலவர்கள் – அப்பாவிகள் – என அடுத்தவர்கள் மீது சுமத்திக்கொண்டிராமல் –

சுட்டு விரலை முதலில் தன் நெஞ்சை நோக்கித் திருப்பி அந்தத் தீங்குகளுக்கு ஏதாவதொரு வகையிலே தானும் ஒரு காரணனாக இருந்திருக்கக் கூடுமோ என்ற கோணத்திற் சிந்தித்து –

நேர்மையின் அடிப்படையில் – உண்மையின் ஒளியில் நீதியின் வழிகாட்டலில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதே –

ஒரு நாட்டின் மன்னர் – தலைவர் – முதலமைச்சர் – போன்றவர்களின் முதன்மைப் பொறுப்பு என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறும் அந்தச் செய்திகள் –

உலகத் தமிழ் மக்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டுச் சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு –

சமத்துவபுரம் – சத்துணவு – சமச்சீர் கல்வி போன்ற பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களும் முன்னேற்றச் செயற்பாடுகளும் ஈட்டிக் கொடுத்த புகழ்ப் போர்வைக்குள் –

குடும்பச் சர்வாதிகாரம் – ஸ்பெக்ரம் ஊழல் – திரைப்பட ஏகபோகம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி – தன் பட்டியைப் பெருக்கி – நாட்டின் முன்னேற்றத்தைக் குட்டிச் சுவராக்கிய தி.மு. க. ஆட்சியின் படுதோல்வி உறுதிப்படுத்தப் பட்ட உடனேயே நல்லவர்கள் சிலரின் நினைவுத் திரையிற் காட்சி அளித்து —

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் –

என எழுப்பும் மௌனக் குரல்

மிகவிரைவில் –

பன்மடங்கு ஓங்கி ஒலிப்பதும் பல்லோர் உள்ளங்களில் எதிரொலிப்பதுமே

அக்கிரம – அநாகரிக – அடக்குமுறை ஆட்சியிலிருந்து உலகத்தைப் பாதுகாக்கும் என நம்புகின்றோம்.

# மானிடப் பிறவியின் மாண்பு

சிவத்தமிழ் வித்தகர் – சிவ. மகாலிங்கம்

இந்த மண்ணிலே பிறந்த எல்லா மனிதருக்கும் மரணம் உண்டு. மருத்துவ வசதிகளின் உதவியினால் மரணத்தைப் பின்போடலாம். ஆனால் முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாது. பிறப்பவர் யாவரும் இறப்பது உறுதி என்பது ஆப்த வாக்கியம். "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்பது அப்பர் பெருமானின் வாக்கு. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" எனப் பிறவி நோயினால் ஏற்பட்ட களைப்பை மணிவாசகரும் கூறுகின்றார். "செத்த பிணத்திற்காகச் சாகப் போகும் பிணங்கள் அழுகின்றன" என்று மரண வீட்டில் அழுபவர்களைப் பார்த்துப் பட்டினத்தடிகள் கூறினார். ஒரு புல்லின் நுனியில் இருக்கும் புழுவானது அந்தப் புல்லில் இருந்து மறு புல்லிற்குத் தாவுவதுபோல ஆன்மாக்கள் பழைய உடல்களைக் களைந்துவிட்டுப் புதிய உடல்களை எடுக்கின்றன என்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது.

மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் மரண வீட்டிற்குச் செல்லும் நாம் கவலை அடைகின்றோம். கண்ணீர் விடுகின்றோம். மரணம் என்னும் நிகழ்ச்சியில் தோன்றும் அனுபவமே துன்பம். நைந்துபோன பழைய ஆடையை எறிந்துவிட்டு நாம் புதிய ஆடைய அணிவதுபோல, பழுதுற்ற உடலை எறிந்துவிட்டு உயிர் புதிய உடலைப் பெறுகின்றது என்றே பகவத்கீதையும் கூறுகின்றது. எடுத்த பிறப்பைச் சரியாகப் பயன்படுத்தாதவர்களுக்கு மீண்டும் பிறவி கிடைக்கின்றது. என்பதைப்

*"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது*
*முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலார்"*

எனத் திருமந்திரமும் செப்புகிறது.

உயிர் தங்கி நிற்கும் சிறைச்சாலையாகவே உடல் திகழ்கிறது. மாயா யந்திரமாகிய உடலுக்குள்ளே ஆன்மா மறைந்து நிற்கிறது என்பதை "மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா" எனச் சிவஞானபோதம் கூறுகிறது.

பிறவிகளில் மகத்தான பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்தவர்களிற் பலர் பிறவியின் பயனை உணராமல் வாழ்ந்து மடிகின்றார்கள். ஆனால் இறையருளுக்குப் பாத்திரமாகிய இந்த மண்ணிலே தோன்றும் சிலர் தமது வாழ்வைப் பயனுள்ளதாக்கி மகத்தான சாதனைகளைச் செய்துள்ளார்கள். இவர்கள் வாழ்ந்த காலம் குறுகியதாக இருந்தாலும் சாதித்த சாதனைகள் நிகரற்றவையாக உள்ளன. சங்கரர் முப்பத்திரெண்டு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். சனாதன தர்மமாகிய இந்து சமயத்தின் சிறப்பைப் பாரத தேசம் முழுவதும் கால் நடையாகச் சென்று பரப்பினார். பௌத்த சமயத்தின் பிடியில் இருந்து இந்து சமயத்தைப் பாரதநாட்டில் அழியவிடாமற் பாதுகாத்த பெருமை சங்கராச்சாரி யாருக்கே உண்டு. உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை என்பவற்றை ஆராய்ந்து அவற்றிற்கு விளக்கஉரை எழுதினார். ஞான யோகத்தில் நின்று இறையருளைப் பெற விரும்புகின்றவர் களுக்கு இவருடைய இந்த உரை நூல்கள் துணை செய்தன. சாதாரண மக்கள் இறையருளைப் பெறுவதற்குத் துணை செய்யக் கூடியது பக்தி மார்க்கம் என்பதை உணர்ந்த சங்கரர் சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி, பஜகோவிந்தம், கணேச பஞ்சரத்தினம், சுப்பிரமணிய புஜங்கம், கனகதாரா முதலிய பக்திரசம் ததும்பும் தோத்திர நூல்களைப் பாடியருளினார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் தொன்மை வாய்ந்த இந்து சமயத்திற்குப் புது இரத்தம் பாய்ச்சினார். "ஜீவ சேவையே சிவபூஜை" என்ற தனது குருநாதனின் தாரக மந்திரத்தைச் செயல் வடிவம் ஆக்கினார். முப்பத்தொன்பது வருட குறுகிய கால வாழ்க்கைக் காலத்தில் உலகமே வியக்கும் சாதனைகள் பலவற்றைப் புரிந்தார். பரதேசிகளின் சமயம் இந்து சமயம் என்ற மேற்கு நாட்டவர்களின் பார்வையை மாற்றி மனிதனைப் புனிதனாக்கும் சமயம் இந்து சமயம் என்பதை நிறுவிக் காட்டினார். இவரால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் இன்று உலகின் பல பாகங்களிலும் கிளைகளை அமைத்து சமயப்பணி, சமுதாயப்பணி, கல்விப்பணி எனப் பல்வேறு பணிகளையும் புரியும் தொண்டு நிறுவனமாகத் திகழ்கின்றது.

வறுமையின் கோரப்பிடியிற் சிக்கித் தவித்த மகாகவி பாரதியார் முப்பத்தொன்பது வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்தார். ஆன்மிகக் கவிஞனாக, தேச விடுதலைக் கவிஞனாக, சமுதாய சீர்திருத்தக் கவிஞனாக – பல்வேறு நிலைகளில் கவிதைகளைப் பாடித் தமிழர் சமுதாயத்திற்கு உந்து சத்தியாகத் திகழ்ந்தார். சிறந்த சக்தி உபாசகராகிய பாரதியின் தெய்வீகப் பாடல்களில் ஆன்மீக

**நாம் நல்லவர்களாக வாழ்ந்துகொண்டு, மற்றவர்கள் அப்படி வாழ்வதற்கு நாம் உதவவும் வேண்டும். மானிடராகப் பிறப்பவர் என்றோ இறந்தே தீருவர். இறப்பை – மரணத்தைத் தடுக்கவே முடியாது. குறுகிய காலம் மட்டும் வாழும் நாம், மற்றவர்களுக்குப் பயன்படும் சிறப்பான செயல்களையே என்றும் செய்தல் வேண்டும்.**

→

சிந்தனைத் தெளிவு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. "சொல்லடி சிவசக்தி" என்று அம்பிகையை உரிமையோடு அழைத்து தனது சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அறிவைச் சரியாகப் பயன்படுத்தக் கூடிய வல்லமையையும் தரவேண்டும் என்று வேண்டி நிற்கின்றார். பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண் புழுக்கம், அச்சம் ஆகிய எட்டும் மனிதனின் மனதைப் பாழ்படுத்தும் அகப் பேய்கள் என்கிறார். அப்பேய்களை அடியோடு களைவதற்கு ஞானம் என்கிற வாளைத் தூக்க வேண்டும் என்கிறார்.

சங்கரர், விவேகானந்தர், பாரதியார் ஆகிய மூவரும் இப்பூமியிலே வாழ்ந்தகாலம் மிகவும் குறுகியது. ஆனால் நூறாண்டு காலம் வாழ்ந்து மறைந்தவர்கள் சாதிக்காத சாதனைகள் பலவற்றை மூவரும் செய்துள்ளார்கள். வாழும் காலம் முக்கியமல்ல. வாழும் முறைதான் முக்கியம் என்பதை மூவரும் உணர்த்தி யுள்ளனர்.

இலட்சக்கணக்கான உயிர்கள் நாள்தோறும் மடிகின்றன. பிறப்பும் இறப்பும் சக்கரம் சுழல்வதுபோல நாள் தோறும் இடம் பெறுகின்றன. மகத்தான பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்தவர்களில் பலர் பகுத்தறிவில்லாத மிருகங்களிலும் மோசமான வாழ்க்கையை இம்மண்ணிலே வாழ்கிறார்கள். தன்னுடைய வீட்டில்; தான் வாழும் சூழலில் வாழ்பவர்களைத் துன்பப்படுத்துவதிலே இன்பம் காண்கின்றார்கள். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றார் தவயோகி திருமூலர். ஆனால் தன்னையும் துன்ப வலையிற் சிக்க வைத்துவிட்டுத் தான் வாழும் சூழலையும் துன்ப மயப்படுத்தி தரித்திரத்தையும், துக்கத்தையும் அரவணைத்து வாழப் பலர் முற்படுகின்றனர். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்றார் நாவுக்கரசர். ஆனால் துன்பமே எந்நாளும் இன்பமில்லை என வாழ்க்கையையே நரகமாக்கி வாழச் சிலர் முனைகிறார்கள். நாலு தலைமுறைக்குத் தேவையான பணத்தைத் தேடி வைத்திருக்கிற பலர் வயிறார உண்ணவும் முடியாது, நிம்மதியாக உறங்கவும் முடியாது தவிக்கிறார்கள்.

இறையருள் நமக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையோடு செயற்படுபவர்களின் காரியங்கள் யாவும் சித்தியாகும். ஈனர்களின் செயல்கள் எதுவும் இவர்களைத் தாக்காது. தர்மத்தை முன்வைத்து அற வாழ்வு வாழ்பவனைத் தர்மம் என்றும் காப்பாற்றும். எடுத்த பிறப்பினைச் சீராகப் பயன்படுத்தி ஒழுங்காக வாழ்ந்த மனிதன் தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுவான் என்பதை,

> *"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
> *தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்ற செந்நாப் போதாருடைய திருக்குறளும் செப்புகிறது.

# இறைவனையடைய

விஞ்ஞானியாக விரும்புகிறவர் பரிசோதனைச்சாலைக்குச் செல்ல வேண்டும். விதம் விதமான பரிசோதனைகளைச் செய்து பார்ப்பதில் தீவிரமாகவும் கடுமையாகவும் உழைக்க வேண்டும்; தம்மை முழுமையாக அதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். மிகச் சிறந்த சமையற்காரராக வர விரும்புகிறவர் சமையலறைக்குச் செல்லவேண்டும். விதம் விதமான உணவு வகைகளைச் சமைத்துப் பழக வேண்டும். அந்தப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். ஒருவர் சிறந்த நீச்சல் வீரர் ஆக விரும்பினால் அவர் நீர்நிலை ஒன்றுக்குச் செல்ல வேண்டும். நீச்சல் பழகுவதை முறையாகவும், தொடர்ந்தும் செய்ய வேண்டும்.

இந்த உதாரணங்கள் நாம் மேற்கொள்ள விரும்பும் ஒவ்வொரு துறைக்கும் பொருந்தும்; ஒவ்வோர் இலட்சியத்துக்கும் பொருந்தும்.

விஞ்ஞானியாக விரும்புபவர் விஞ்ஞானகூடத்திற்கும், சமையற்காரராக விரும்புபவர் சமையற் கூடத்திற்கும்; நீச்சல் வீரராக விரும்புபவர் நீர் நிலைக்கும் செல்லவேண்டும் என்பதுபோல்; சிறந்த ஆன்மிகவாதியாக விரும்புபவர், சிறந்த ஆன்மிக முன்னேற்றம் பெறவிரும்புபவர் என்ன செய்ய வேண்டும்? இது இறைவனை அடைய வைக்கும் காரியம்.

இறைனை அடைவதை நோக்கமாகக் கொண்டு எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் செய்யலாம். அப்படி நாம் இறைவனை அடைவதை நோக்கமாகக் கொண்டு செய்யும் காரியம் எதுவாயினும் அதில் அறம் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். சத்தியம் கட்டாயமாக இருக்கவேண்டும். அறநெறிக்கும், சத்தியத்திற்கும் இணங்க ஒருவர் வாழும் வாழ்க்கை அவரது வாழ்வைச் செம்மைப்படுத்துவதுடன் மற்றவர்களது வாழ்வையும் செம்மைப்படுத்த உதவும். அவ்வாழ்வு ஆண்டவனிடம் அழைத்துச்செல்லும். இம்மை நலனையும், மறுமை நலனையும் பெறச்செய்யும்.

(அகில இந்திய வானொலியில் - சுவாமி கமலாத்மானந்தர் சொல்லக் கேட்டவை)

# சைவசித்தாந்தம்

(இந்துசாதனம் – சித்திரை மாதம் 2011 – 16 ஆம் பக்கத் தொடர்)

முனைவர் ஆ.ஆனந்தராசன்

### ஞான தீக்கை

**201. ஞானாசிரியர் மலத்தைப் போக்கி ஞானத்தைத் தரும் முறை யாது?**

தீக்கை சமயம், விசேடம், நிருவாணம் என மூன்று வகைப்படும். அவற்றுள் மூன்றாவதாகிய நிருவாணமே நிறைவான தீக்கையாகும். இது ஞானத்தின் பொருட்டாகச் செய்யப்படுவது ஆகலின் ஞான தீக்கை எனப் பெயர் பெறும்.

முறையாகச் சரியை முதலிய தவங்களைச் செய்து பக்குவ முதிர்ச்சி பெற்று அதி தீவிர சத்தி நிபாதம் நிகழ்ந்த நிலையில் முப்பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு உணர்தலில் பெருவிருப்பம் உண்டாகும்.

சொல்லும், பொருளும் ஆகிய இவற்றின் வழியாகவே நாம் வினைகளை ஈட்டிக் கொள்கிறோம். கன்ம ஈட்டத்திற்கு வழிகளாதல் பற்றி இவை ஆறும் அத்துவா எனப்படுகின்றன. அத்துவா என்பதற்கு வழி என்பது பொருள்.

ஈட்டப்பட்ட பழ வினைகளின் தொகுதி சஞ்சிதம் எனப்படும். அஃது உயிரறிவில் ஞானம் விளங்காதபடி தடுத்து நிற்பது.

விளக்குத் திரியின் நுனியிற் சேர்ந்திருக்கும் கரியாகிய மாசு அத்திரியில் சுடர் எளிதிற் பற்றாதபடி தடுத்து நிற்கும். அக்கரியை நீக்கி விட்டால் திரி தீச்சுடரை உடனே பற்றிக் கொள்ளும்.

அக்கரிபோல இருப்பதுதான் சஞ்சித கன்மம், அஃது உயிரின் அறிவில் நின்று ஞானமாகிய சுடரை ஏற்ற விடாதபடி செய்யும்.

**சைவத் தமிழ் மக்களின் மிகச் சிறந்த சமயத் தத்துவமாக விளங்குவது சைவ சித்தாந்தம். அறிவுசார் தத்துவம் என உலக அறிஞர்களாற் போற்றப்பெறும் இத்தத்துவம் கூறும் சமய உண்மைகள், முப்பொருள் விளக்கம், புண்ணியம் – பாவம், மறுபிறவிக் கொள்கை சம்பந்தமான பல விடயங்களை வினா விடை முறையிலே தெளிவாக்கியுள்ளார் முனைவர் ஆ. ஆனந்தராசன். மலேசியாவிலுள்ள "திருக்கையலாய குரு பரம்பரை தினம்" – சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் – அறங்காப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பே. குலவீரசிங்கம் அவர்களின் ஆதரவுடன் இந்துசாதனம் 2009 – வைகாசி இதழ் தொடக்கம் வெளிவந்த இத்தொடர் இந்த இதழுடன் நிறைவுறுகின்றது.**

'நான் யார்? எனக்கு இந்த உடம்பின் தொடர்பு எப்போது ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? எனக்கு வரும் துன்பங்களுக்கு எது காரணம்? இத்துன்பங்களிலிருந்து நீங்குவதற்கு என்ன வழி? ஆக்கைக்கு இரை தேடிக் காக்கைக்கு இரையாய்க் கழிவதுதான் வாழ்வில் முடிவா? பிறப்பும் இறப்பும்தான் என் இயல்பா? இவற்றினின்றும் நீங்கி ஒரு நிலையாய் வாழும் தன்மை எனக்கு இல்லையா? உண்டாயின் அதனைப் பெறுவதற்கு வழி யாது?' – என இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதிற் பேரவா நிகழும்.

இந்நிலையை அறிந்து இறைவன் முத்தராய் உள்ள ஒரு ஞானகுருவின் அறிவில் ஆவேசித்து நின்று அவ்வுத்தம மாணவனுக்கு நிருவாண தீக்கையைச் செய்தருளுவான்.

இந்த ஞான தீக்கையில் மாணாக்கன் ஞானத்தைப் பெறுதற்குத் தடையாய் இருந்த அவனது சஞ்சித கன்மம் முற்றிலுமாக நீக்கப்படும்.

உயிர் கன்மங்களைச் செய்வதற்கு இடமாக நின்று உதவுவன ஆறு அத்துவாக்கள் ஆகும். அவை வன்னம், பதம், மந்திரம், தத்துவம், புவனம், கலை என்பன. இவற்றுள் முன்னைய மூன்றும் சொல்லுலகம் ஆகும். பின்னைய மூன்றும் பொருளுலகம் ஆகும்.

ஆதலால் நிருவாண தீக்கையில் ஆசிரியர் அத்துவித சுத்தி என்னும் முறையினாற் சஞ்சித கன்மத்தை நீக்குவார். அந்நிலையில் அம் மாணாக்கனது அறிவு, ஞானமாகிய சுடரை ஏற்றுக்கொள்ள வல்லதாகிறது.

இவ்வாறு கன்மமும், அதற்கு இடமாக உள்ள மாயையும் உயிருக்குக் கழிகின்றன. பின் ஆசிரியர் செய்யும் உபதேசத்தினால் உயிருக்கு மெய்ப்புணர்வாகிய ஞானம் உதிப்பதனால் அறியாமையைச் செய்துவந்த ஆணவ மலம் அடியோடு நீங்குகிறது.

இம்முறையில் ஞானாசிரியர் மும்மலங்களைப் போக்கி மாணாக்கனுக்கு ஞானத்தைத் தருகின்றார்.

### அருள் உபதேசம்

**202. ஞானாசிரியர் செய்யும் உபதேசம் என்ன?**

அதிதீவிரம் என்னும் மிகு சக்திநிபாதம் நிலையில் நிற்கும் உத்தம மாணாக்கனுக்கு ஞானாசிரியர் பின்வருமாறு உபதேசம் செய்வார்.

'நீ இதுகாறும் உடம்பும் ஐம்பொறிகளும் முதலிய கருவிக் கூட்டத்தில் அகப்பட்டு 'அவைகளே நான்' எனக் கருதி மயங்கி நின்றாய்.

அவைகளுக்கு வருகின்ற தோற்றம், வளர்ச்சி, அழிவுகளையும்; பசி, தாகம், நோய் முதலியவற்றையும் உன்னுடையனவாகக் கருதிக்கொண்டு துன்புற்றுப் பிறப்பு இறப்புக்களில் உழன்றாய்.

அக்கருவிக் கூட்டங்கள் யாவும் அறிவில்லாத சடப் பொருட்களே, நீயோ அறிவுடைய சித்துப்பொருள். ஆயினும் உனது அறியாமையினால் அவற்றிற்கு உரிய இறப்பு முதலிய மாற்றங்களை உன்னுடைய தன்மைகளாகக் கருதி மயங்கினாய். உண்மையில் நீ சித்துப்பொருள் ஆகலின் உனக்கு யாதொரு மாற்றமும் இல்லை.

நீ இயற்கையில் எம்மைச் சார்ந்து ஒரு நிலையாய் இருத்தற்கு உரியவன். அதற்கு மாறாகப் பாசமாகிய உலகச் சார்பைப் பொருந்திப் பிறப்பு இறப்புக்களில் அலைவுறுதல் உனக்கு இயற்கையன்று." இதுவே ஞானாசிரியர் செய்யும் அருள் உபதேசமாகும். இதில் முப்பொருள் இயல்பும் உணர்த்தப்பட்டுள்ள முறைமையைக் காண்க.

**உபதேசப் பயன்**

**203. அருள் உபதேசத்தின் பயனாய் நிகழ்வது என்ன?**

முப்பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணர்தலே ஞானம். இந்த ஞானம் ஞானாசிரியராலே தரப்படுவது. இதனைப் பெற்ற மாணவர்களுக்குப் பாச நீக்கமும், சிவப்பேறும் ஆகிய முடிநிலைப் பயன்கள் வாய்க்கும்.

ஞானாசிரியர் உணர்த்திய ஞானத்தைக் கேட்ட உடனேயே அதனை முழுதுமாக உணர்ந்து கொள்ளுதல் என்பது பக்குவத்திற் சிறிது குறைந்தவர்களுக்கு இயலாது. அவர்கள் சிறிது சிறிதாக உணர்ந்து வந்து நாளடைவிலேயே ஞானத்தை முழுதுமாக உணர்ந்து கொள்வர். அது பற்றியே ஞானம், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என நான்கு படிநிலைகளாக நிகழும் என்று சைவ சித்தாந்தம் கூறும்.

அம்முறையில் முப்பொருள்களின் இயல்பைச் சிறிது சிறிதாக உணர்ந்துவரும் காலத்தில், உடம்பும் கருவிகளும் ஆகிய தத்துவக் கூட்டங்கள் தம்மின் வேறானவை என்று படிப்படியாக உணர்ந்து தெளிந்து முடிவில் அவற்றினின்றும் நீங்குவர்.

ஆன்மாவாகிய தாம், தத்துவங்களைப் போலச் சடமாகாது சித்தேயாயினும் யாதொரு துணையும் இன்றித் தனித்து நின்று அறிகின்ற சித்து அல்ல என்றும், தமக்கு என்றும், துணையாய் நின்று உணர்த்தி வருவது முதல்வனது திருவருளே என்றும், முதல்வன் செயல் என உணர்ந்து, திருவருளில் ஒடுங்கி அதன் வழி நிற்பர்.

அருளோடு ஒருமைப்பட்டு நிற்றலால் ஆணவ மலத்தினுடைய வாதனை எனப்படும் யான், எனது செருக்கு நீங்கும். இவ்வாறு அருளோடு ஒன்றுபட்டு நிற்பது 'ஏகனாகி நிற்றல்' எனப்படும். இந்நிலையில் செய்ய நேரும் செயல்கள் எல்லாவற்றையும் தன்னால் செய்யப்படுவது எனக் கருதாமல், இறைவன் பணி எனச் செய்து வருவது 'இறைபணி நிற்றல்' எனப்படும்.

தன் பணி நீத்து எல்லாவற்றையும் இறைவன் பணியாக உணர்ந்து செய்வதால், மாயா காரியங்கள் ஆகிய உலகியல் முனைந்து ஆன்மாவைத் தன் வசப்படுத்துதல் இல்லை. இவ்வாறு நிற்போர் செய்யும் முயற்சிகள் எல்லாம் இறைவன் திருவருளால் நிகழ்வனவே. ஆதலால் அவற்றால் வினை விளைவதில்லை.

முன்னே கூறிய ஏகனாகி நிற்றலால்; ஆணவ மலவாதனை நீங்குகிறது எனவும், இங்கு கூறிய இறைபணி நிற்றலால் மாயை கன்மங்கள் நீங்குகின்றன எனவும் அறியலாம். இது பாச நீக்கம்.

இனிச் சிவப்பேறு என்பது இறைவனோடு ஒன்றி இன்புறுதல். நான் என ஒரு பொருள் இல்லை என்னும்படி அருளில் ஒன்றி அதுவாய் நின்ற ஆன்மா; அருள் விளக்கத்தால் முதற் பொருளாகிய சிவத்தை உணர்ந்து; உணர்வோனாகிய தன்னையும் உணராது, அதனிடத்து அழுந்தி நிற்றலே நிட்டையாகும்; அதுவே ஆனந்த நிலையாகும்.

இவ்வனுபவ நிலைகளைக் கண்ணும் ஞாயிறும் ஆகிய உவமையில் வைத்து ஒருவாறு விளங்கிக்கொள்ள முடியும்.

கண் போன்றது ஆன்மா. கண்ணொளி போன்றது ஆன்மா அறிவு. ஞாயிறு போன்றது சிவம். ஞாயிற்றின் ஒளி போன்றது திருவருள்.

கண் உலகப் பொருள்களின் காட்சியில் ஈடுபட்டு அதில் அழுந்தியிருக்கும்போது அதற்கு ஞாயிறோ அதன் ஒளியோ புலப்படுவதில்லை. அதுபோல ஆன்மா உலக வாழ்க்கையில் அழுந்தி யிருக்கின்ற காலத்தில் அது சிவத்தையோ திரு வருளையோ அறிவதில்லை; அறிய ஆசைப்படுவதும் இல்லை.

உலகக் காட்சியிற் சலிப்புற்ற கண்; கீழ்நோக்குதலை விடுத்து மேல்நோக்கிப் பார்வையைச் செலுத்துகிறபோது கண்ணொளி ஞாயிற்றின் ஒளியை நேரே பொருந்துகிறது. அப்பொழுது அதற்குச் சூரியவொளி புலப்படுமேயன்றி உலகப் பொருட்களின் காட்சி புலப்படுவதில்லை.

அதுபோலப் பக்குவமுற்ற ஆன்மா உலகியலை உவர்த்து, உடம்பையும் உலகப் பொருள்களையும் தன்னின் வேறானவை எனக் கண்டு படிப்படியாக நீங்குகிறபோது அதன் அறிவில் திருவருள் ஒளி படிமுறையில் விளங்கி மேம்பட்டுத் தோன்றும். அருள் ஒளி என்பது இறைவனது பேரறிவு தானே. அதுவே பதிஞானம் எனப்படுவது. அப்பேரறிவோடு ஆன்ம அறிவு முழுமையாகப் பொருந்தி ஒன்றுபட்டு நிற்கும். அந்நிலையில் அவ்வான்மாவுக்கு உலகக் காட்சி புலப்படுவதில்லை; உலகக் காட்சி அதனை மயக்குவதில்லை; திருவருள் ஒன்றையே அவ்வான்மா கண்டு கொண்டிருக்கும்.

ஞாயிற்றின் ஒளி தன்னோடு ஒன்றுபட்ட கண்ணுக்குத் தன் முதலாகிய ஞாயிற்றைக் காட்டும். ஞாயிற்றைக் கண்ட கண் அப்பேரொளிப் பிழம்பிலே அழுந்திவிடும். அதுபோலத் திருவருளை முன்னர் தரிசித்த ஆன்மா அத் திருவருளாகிய பதி ஞானம் பதியாகிய சிவத்தைக் காட்ட; அம் முதற்பொருளைத் தலைப்பட்டுத் தன்னை மறந்து சிவானந்தத்தில் திளைத்து நிற்கும். இதுவே நிட்டை என்பது.

⟶

ஞான குருவினது உபதேசத்தின் பயனாக ஆன்ம அறிவில் நிகழும் அருளனுபவங்களை இம்முறையில் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

**சீவன்முத்தர்**

**204. நிட்டை கூடிச் சிவத்தை அணைந்த பெருமக்கள் இவ்வுலகில் எவ்வாறு இருப்பர்?**

கட்டு நிலையில் உயிர் ஆணவ மலத்தோடு கூடித் தான் என வேறு நில்லாது அம்மலத்துள் அழுந்தி அதுவேயாய் ஒன்றி நின்றது அன்றோ? அதுபோலவே உயிர் சிவத்தோடு கூடித் தான் என வேறு தோன்றாது அதனில் அழுந்தி அதுவேயாய் ஒன்றி நிற்கும் என்பதே சித்தாந்த முத்தியாகும்.

இந்நிலையை உடம்போடு உள்ள காலத்திலேயே அடைவது தான் நிட்டை எனப்படுகிறது.

இந்நிட்டை கைவரப்பெற்ற பெருமக்களே அணைந்தோர் என்றும், சீவன் முத்தர் என்றும் கூறப்படுவர். இம்முத்தர் உடம்போடு ஏனையோர்போல உலகத்திருப்பர் ஆதலின் 'சீவன் முத்தர்' எனப்பட்டனர்.

இதனால், சீவன்முத்தராவார் ஞானகுருவின் அருளால் ஞானத்தைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடினோர் என்பதும், ஆயினும் உடம்பு நீங்கப் பெறாதவர் என்பதும் விளங்கும்.

இம்முத்தர் உடல் விடாதிருப்பதற்குக் காரணம், இப்பிறப்பில் முகந்து கொள்ளப்பட்டு வந்த பிராரத்த வினையாகும். அவ்வினை கழியும் அளவும் அவர் உடம்பும் நீங்காது நிற்கும்.

பிராரத்தம் பற்றி அவர்க்கு இன்ப துன்பங்கள் வரினும் அவை இறைவனால் தரப்பட்டவையென விருப்பு வெறுப்பின்றி நிற்பர். ஆதலால் அவை உயிரைத் தாக்காது உடலளவாய் வந்து கழியும் எனப்படும்.

இனி, அவ்வின்ப துன்பங்கள் அவர்களுக்குச் சிவபோகமாய் விளையும் என்ற மற்றொரு கருத்தும் நூல்களிற் சொல்லப் படுகிறது. திருநாவுக்கரசருக்கு வந்த துன்பங்கள் சிவபோகமாய் நிகழ்ந்தன எனவும், நம்பியாரூரர் நுகர்ந்த உலக இன்பம் சிவபோகமாய் விரைந்தது எனவும் பெரிய புராணத்தால் அறிகிறோம்.

இம்முத்தர் பாசப் பற்றுடைய ஏனைய உலகரை உறவாகவும் நட்பாகவும் கருதாது, அடியராது உறவையே விரும்பி, அடியாரிடத்து அன்புடையராய், அவருக்குத் தாம் அடியராய் ஒழுகுவர்.

மேலும், தம் நிலை நீங்காது நிலைத்து நிற்றல் வேண்டிக் குருவாகிய தம் ஆசாரியாரையும், திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகளையும், அடியவர் திருவேடத்தையும் சிவனாகவே கண்டு அன்பு செய்து வழிபட்டு வாழ்வர். அவ்வழிபாடு அவர்க்குச் சிவானந்தம் ஆகிய பெரும் போகத்தை மேன்மேலும் வளரச் செய்யும்.

உடம்பு நீங்கியவுடன் அவர்கள் பரம்பொருளோடு இரண்டறக் கலந்து நிற்கும் பரமுத்தியைப் பெறுவர்.

# வழிபட ஏது நேரம்?

புகழ்பெற்ற ஆங்கில அறிஞரும் எழுத்தாளருமான டாக்டர் ஜான்சனிடம் வந்த நண்பர் ஒருவர், "எனக்கு காலையிலிருந்து மாலைவரை ஏராளமான வேலைகள் உள்ளன. இரவிற்கூட ஓய்ச்சல் ஒழிவின்றி உழைத்துக்கொண்டிருக்கிறேன். இந்த நிலையிற் கடவுளின் பெயரைச் சொல்லவோ, வழிபடவோ என்னால் எப்படி நேரத்தை ஒதுக்க முடியும்?" என்று கேட்டார்.

அதற்கு ஜான்சன் " உலகத்தின் மொத்தப் பரப்பில் மூன்று பாகம் நீராகவும், ஒரு பாகம் மட்டும் நிலமாகவும் உள்ளது. அந்த நிலத்திலும் பெரும் பகுதி மனிதர்கள் வாழ இயலாத மலைகளும், பாலைவனங்களும், காடுகளும், ஆற்றுப் படுகைகளுமே உள்ளன. இம்மாதிரியான நிலத்திற் கோடிக்கணக்கான மக்கள் வாழ்வதற்கு எப்படி இடம் கண்டுபிடிக்கிறார்கள்?" என்று பதிற் கேள்வி கேட்டார்.

அதற்கு அந்த நண்பர், "எவ்வளவோ இன்னல்களுக்கிடையே மனிதன் கஷ்டப்பட்டுத்தான் வாழ்வதற்கு இடத்தைக் கண்டுபிடிக்கிறான்" என்றார்.

உடனே ஜான்சன், "அதைப் போலத்தான் மனிதனும் சில மணித்துளிகளையாவது கடவுள் வழிபாட்டிற்காக ஒதுக்க வேண்டும்" என்றார்.

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

கவிஞர் திரு. இ. இராசையா குகதாசன்

(இந்துசாதனம் – 2011 பங்குனி 23 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

486. நம்மதம் சைவ மென்றும் நாமெல்லாம் சைவ ரென்றும்
இம்மதர் தொழுதற் கேற்ற இறைசிவ னாகு மென்றும்
செம்மத முறைமை காட்டுஞ் செகதலத் தீட்சை வைப்பால்
அம்மத மனித னுள்ளே அறுவகைப் பிரிவுண் டென்றார்.

487. மறையுரை யாதி சைவர் மதிமகா சைவர் காவற்
திறவநு சைவர் யாரும் தெரியவாந் தரநற் சைவர்
பிறஅறு வகையு ளார்போற் பிரவர சைவ ரோடு
அறுவகைச் சைவ ராவார் அந்நியச் சைவ ராகும்.

488. ஒருவர நாதி சைவச தாசிவ மூர்த்தி யாரின்
திருமுக மைந்தி லேயும் தீட்சிக்கப் பட்ட தாக
உருவகித் தெவரு மோதும் உயரைந்து ரிஷித்தொ டர்பில்
வருசிவப் பிரா மணர்தான் வளஆதி சைவ ராவார்.

489. வைதிக நெறியில் வாழ்பி ராமண குலத்திற் தோன்றி
ஐதிக மவைகள் நீங்கி அருட்சிவ பூசை யேற்று
செய்தவ மேன்மை யாலே சிவதீட்சை பெற்று வாழும்
கைகதவ முடைய பேர்ம காசைவ ராவ ரென்றே.

490. மநுபெரு நீதி காக்கும் மகாசத் (தி)ரி யர்க ளுள்ளும்
பநுவலர் போற்றி யேற்றிப் பரவுவை சியருள் ளேயும்
தனமெனுஞ் சைவ ரேற்றும் தண்ணசைவ தீட்சை பெற்றால்
அநுசைவ ராவ ரென்றே அறிந்திடு மென்றுஞ் சொன்னார்.

491. காத்திர மான மார்க்கம் காசின் யிஃது வென்றே
பாத்திர ராகி யந்தப் பரநெறி முறையை யோர்ந்து
சாத்திர மவைக ளேத்தும் சார்சிவ தீட்சை பெற்ற
சூத்திர ராகு வார்அ வாந்தர சைவ ராவார்.

492. வரமது வென்றே சொல்லு மறுவகை யோர்க ளுள்ளும்
அரநெறி யதனை யேற்று அருட்சிவ தீட்சை பெற்றே
பரவரன் புகழை யோதி பாரினில் வாழு வோர்கள்
பிரவர சைவ ராவார் பேதமை பாரு மென்றார்.

493. பற்றறு மிறையின் பாதம் பற்றிடு மாசை தூண்ட
சற்குண சீல ராகிச் சார்புடை முறைமை யாலோ
கற்றுணர் வழியி லேயோ கழலிணை யிறைஞ்சி வாழும்
மற்றுள மாந்த ரெல்லாம் அந்நிய சைவ ராவார்.

494. இன்னவித் தன்மை யாலே இணைமலர் வழிபா டாற்ற
முன்னிலை யுடைய ரேனும் முன்பவ வினையி னாலே
புன்னிலை யடையு பேரும் பூங்கழல் பணிய வேற்று
நன்னிலை யதனில் வைப்பார் நாதனேன் றறிய லாமே.

495. அன்பினர் வழிபா டேற்று அருளிடு மிறைவர்க் காற்றும்
உன்னுபல் பூசை வைப்பில் உலகுரை கிரியை யெல்லாம்
வன்னபல் வருணத் தார்க்குள் வகையது மாறு மல்லால்
அன்னவர் முறைமைக் கெல்லாம் அடிப்படை யொன்று தானே.

496. சிவபெரு மான்பு றத்தே சிவலிங்க வடிவு தோறும்
அவரடி யார்கள் கொண்ட தவத்திரு வேடத் தேயும்
உவவிட மாய்அ கத்தே உயிரிட மாகக் கொண்டு
அவருல கான்மா வாற்றும் வழிபாடு கொண்ட ருள்வார்.

497. புவனிசித் திரித்தல் லிங்கப் பொருளென வுரைத்த லாலே
சிவபிர பாவ மேதான் செழிலிங்க மென்று வாகும்
அவரிட வாண மோடு அழகுள சைல மெல்லாம்
இவணுப சாரத் தாலே இலிங்கம தாகு மென்றும்.

498. பரவிடு லிங்க முள்ளே பரம ஆசாரி யார்கள்
தரவெழுந் தருளப் பண்ணி தன்னுயிர் பிரியு மட்டும்
உரமொடு தன்பொ ருட்டே உவப்பொடு பூசித் தற்கே
மரபுள இட்டலிங்க மான்மார்த்த லிங்கம் தேரீர்.

499. சலமணி யிறைவன் சர்வ சங்கார கால மட்டும்
புலமுள யுயிர்க ளோடு பிறரது நலமும் பேணி
தலமவை தோறும் நின்றே தாங்குப ரார்த்த லிங்கம்
நிலமிரு லிங்கம் (இ) ரண்டாம் நீரிதை ஒரு மென்றார்.

500. கோவிலிற் காணும் லிங்கம் குலந்தொழு சுயம்பு காணம்
மேவுதை விகமொ டாரி டம்மானு டம்ஐந் தாகும்
ஆவல தீயு மேனி யசைவில தாத லலே
தாவர மென்றே கொள்வார் தரணியி லுள்ளா ரென்றார்.

501. செய்யுதம் பாவ நீக்கி சென்றிறை யருளிற் கூட
மெய்யுள சரியை யோடு மிகவொளிர் கிரியை யோகம்
கைவரு ஞான மாகக் கருதிடு மார்க்கம் நான்கும்
சைவர்க ளிறையின் பாதம் சாருதற் குரிய தென்றார்.

502. உன்புறத் தொழிலி னாலே உருவவம் மேனி நோக்கி
அன்புறு மனத்தி னோடு அளிவழி பாடு தானே
பன்னிரு மறைக ளாலும் பகருதற் கரியன் பாதம்
சென்றுயி ருறைய வாற்றச் செய்திடு சரியை யாகும்.

503. உய்ந்திட உயிர்களெல்லாம் உறுபுறத் தொழிலி னோடு
அந்தமி லருளை வேண்டி அகத்தொழில் (இ) ரண்டி னாலும்
வந்தரு உருவ மான வருட்திரு மேனி நோக்கி
தந்திடு வழிபா டெல்லாம் தரணியிற் கிரியை யாகும்.

504. ஏகன னேக னாகு மிறை கொழு வடிவ மான
மோகன அருவ மாம்திரு மேனியை நோக்கி நாளும்
ஆகம விதியிற் சொன்ன அகத்தொழி லதனா லாற்றல்
யோகம தாகு மென்றே யுகம்வரு புருஷர் சொன்னார்.

505. முத்திரு மேனி மேலாய் முழுவுல கண்டா கார
நித்தவி யாபக சந்நி தானந்தச் சிவப் பிழம்பாய்
அத்தொழி லிரண்டும் நீக்கி அறிவெனுந் தொழிலா லேற்றல்
இத்தரை ஞான மார்க்கம் என்றதும் தேரு மென்றார்.

506. திருவடி சேர நான்கு திருபெறு மார்க்கந் தேர்ந்து
ஒருமன ராகியாங்கே ஒழுகுவர் தாம டியார்
அருமையு ளடியர் மேனி ஆசைவுடை யாத லாலே
தருவெனு மிவைக ளைத்தான் சங்கம மென்றுஞ் சொல்வார்.

507. எங்குமே நிறையி றைவன் சிவலிங்க மேனி யோடு
தங்குமெய் யடியர் பூணும் தவத்திரு வேடம் (இ)ரண்டும்
பங்கமில் தயிரில் நெய்போல் பாங்குடன் விளங்க நின்றும்
இங்குமற் றிடங்கள் பாலில் நெய்யென மறைந்தும் நிற்பார்.

508. ஆதலி னாலே சைவ சமயிகள் நாமெல் லோரும்
தீதவை நீங்கப் பதியாம் சிவபெரு மானில் நீங்காக்
காதல ராய் இலிங்க சங்கமு மிரண்டும் வாழ்வில்
ஓதிடு வழியி லேற்று ஓர்ந்திடு மென்றுஞ் சொன்னார்.

(வளரும்...)

# பகவான் ஸ்ரீ சத்யசாய் பாபா

பரம்பரை பரம்பரையாக இந்துக்களாக வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்திற் பிறந்தார்; பூர்வ புண்ணியத்தின் தொடர் விளைவாக - விட்ட குறை தொட்ட குறையாக, சிறு வயதிலேயே அசாதாரணமான - தெய்வீக ஆற்றல்களை வெளிப்படுத்தத் தொடங்கினார்; வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியவற்றிலிருந்து சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான நீதிகள், அறக் கருத்துக்கள், தத்துவங்கள் போன்றவற்றை எடுத்துக்கூறி மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டினார்; "எல்லோருக்கும் மேலே அளப்பரிய ஆற்றலுடைய ஒருவன் செயற்படுகின்றான் - அவனே இறைவன் - அவனே நமது மிகப் பெரிய வழிகாட்டி. அவனுடைய எண்ணத்தையும் இயல்பையும் நன்கு உணர்ந்து நமக்காக மட்டுமல்லாமல் மற்றவர்களுக்காகவும் வாழ்தல் நம் ஒவ்வொருவரின் கடமை" என்ற பேருண்மையை ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிய வைப்பதற்காகவே தன்னிடமுள்ள தெய்வீகத் திறமைகளையும் அறிவுச் செல்வத்தையும் பயன்படுத்தினார்; வெறும் போதகராக அல்லாமல் சக்தி மிகுந்த சாதகராகவும் வாழ்ந்தார்; உலகெங்கும் 114 கேந்திர நிலையங்களில் 1200 சத்யசாயி அமைப்புக்கள் சமய, கல்வி, மருத்துவப் பணிகளில் ஈடுபடுவதற்குத் தூண்டுகோலாக இருந்தார்; "நான் புதிதாக ஒரு சமயத்தை உருவாக்க விரும்பவில்லை; ஒவ்வொருவரும் தத்தம் சமயங்களில் இருந்து கொண்டே, சமய உண்மைகளைச் சரியாகத் தெரிந்து கொண்டு நேர்மையாக அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்" என்றார். இவ்வாறெல்லாம் தன்னுடைய சிந்தனை, சொல், செயல்களுக்கிடையே சத்திவாய்ந்த அருட்பாலத்தை அமைத்து, 'ஓர் ஆன்மீகத் தலைவர் எப்படி வாழவேண்டும் என்பதற்கு இலக்கணமாகவும் எப்படி வாழ்ந்தார் என்ற இலக்கியமாகவும் திகழ்ந்த பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா சென்ற 24.04.2011 இல் புட்டபர்த்தியில் மஹா சமாதி அடைந்துவிட்டார். இந்து சமயத் தத்துவங்களின் அடிப்படை நம்பிக்கைகளுள் ஒன்றான 'மறுபிறவிக் கொள்கை' யை நிரூபிக்கும் விதத்தில், முற் பிறவியில் தான் "சீரடி சாய் பாபா" வாக இருந்ததைச் சில சான்றுகளுடன் உறுதிப்படுத்திய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா, இன்னும் சில ஆண்டுகளுள் 'பிரேம சத்ய சாய் பாபா' வாக இந்தியாவிற் தோன்ற விருப்பதாகவும் கூறியுள்ளார். உலகெங்கும் பரந்து வாழும் அவருடைய பக்தர்கள் அந்த அற்புதமான காலத்திற்காக ஆவலுடன் காத்திருக்கின்றார்கள்.

## ஓடோடி வந்தெம்முன் ஒளிர்வாய் மீண்டும் !

சத்தியம்தர் மம் அன்பு சாந்திசமா தானஞ்சந் தோஷம் எங்கும்
நித்தியமும் நின்றுநிலைத்திட வேண்டும் என்றவுயர் நோக்கை உந்தன்
சித்தமிசை வைத்து அருட் சொல்லெழுத்துச் செயலாலே சிறியோமுக்கு
எத்தினமும் எடுத்துக்காட்ட டாய்த்திகழ்ந்த ஏந்தல் சத் தியசாய் பாபா!

இறையொருவ னிருக்கின்றான் எல்லையிலா அருளுடையான் ஏற்றம் மிக்கான்
மறைந்திருந்தே மக்களைமற் றுயிர் பறவை மிருகங்கள் மரங்கள் தம்மை
முறையுடனே படைத்தளிக்கும் முதல்வனவ னென்கின்ற மூத்தோர் வாக்கைச்
சிறந்த அருட் செயல்களினாற் செகமுணரச் செயவைத்த சித்தன் நீயே.

எந்தவொரு நாட்டினிலெக் கோடியினி லிருந்தாலும் இதயத் தாலே
வந்தனைசெய் தேதமது வருத்தமிடர் தீர்க்கவுனை வேண்டி யோர்க்குச்
சிந்தை கனிந் தேசுகமும் சீருடைய பெருவாழ்வும் சேர்த்தே யீந்த
அந்தணனே! அருட்குருவே ! ஆனந்த வாகினியே ! அருள்வாய் மீண்டும்

முற்காலத் தற்புதங்கள் முழுவதுமே புனைவல்ல என்ப தற்கோர்
நற்சான்றாய் நானிலத்தின் நம்பிக்கைக் காயுனது நல்லெண் ணத்தால்
நற்பூதி குங்குமமும் நறுஞ்சாந்து சங்கிலிமோ திரமும் பட்டும்
பற்பலவாம் பொருள்களையும் பலபேர்முன் கையசைத்தே பகுத்தீந் தாயே!

அருள்சுரக்கும் ஆன்மீகச் சிந்தனையின் அருங்கலமாய் அமுதின் ஊற்றாய்
விரிசடையும் மென்னகையும் மிகுசெம்மை வண்ணஔி உடையுங் கொண்ட
திருவுருவாய்த் தெய்வ அவ தாரமெனத் திகழ்சத்ய சாயீ பாபா
உருகியுளங் கரைகின்றோம் ஓடோடி வந்தெம்முன் ஔிர்வாய் மீண்டும்.

- சிற்பி

# கணக்கும் கடவுளும்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

உலகம் இன்று நாத்திக மயமாகிக் கிடக்கிறது.
இறை நம்பிக்கையற்றார் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது.
இறை என்று ஒரு பொருள் இல்லை என்பதே இந்நாத்திகர்களின் வாதம்.
உலகு தோன்றி நிலைத்து மறைகின்றதே .
இது யாரால் நிகழ்த்தப்ப டுகின்றது எனக் கேட்டால்?
அனைத்தும் இயற்கை எனச் சுலபமாக இவர்கள் பதிலளிப்பர்.
இந்நாத்திகவாதம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல;
தொன்றுதொட்டே இக்கருத்துடையார் இருந்துள்ளனர்.
நிரீச்சுரவாதிகள் என இவர்களை அக்காலத்திற் சுட்டினர்.
புலன்களால் காணப்படுபவை மட்டுமே உண்மை என்பது,
இந்நிரீச்சுவரவாதிகள் கொள்கை.

அறிவுலகு ஓர் உண்மையை நிரூபிக்க மூன்று நெறிகளைக் கையாண்டது.
இவ்வழிகளை வட நூலார் பிரமாணங்கள் என்றுரைப்பர்.
ஓர் உண்மையைப் புலன்களாற் கண்டறிவது அவற்றுள் ஒன்று
இதனைக் காட்சிப் பிரமாணம் என்பர்.
ஓர் உண்மையை ஊகித்தறிவது மற்றொன்று.
இதனை அனுமானப் பிரமாணம் என்பர்.
ஓர் உண்மையை அறிவதற்காம் மூன்றாவது வழி.
இதனை ஆகமப் பிரமாணம் என்பர்.
உனக்கு வந்திருப்பது இன்ன நோய் என
வைத்தியர் சொல்ல, ஏற்றுக்கொள்வது இதற்காம் உதாரணம்.

தத்துவவாதிகள்
இம் மூன்று பிரமாணங்களின் அடிப்படையிலேயே உண்மைகளை நிறுவுவர்.
ஆனால் கடவுள் மறுப்புக் கொள்கையாளர்
இம்மூன்று பிரமாணங்களில்
காட்சிப் பிரமாணம் தவிர , மற்றைய இரு பிரமாணங்களையும் ஒத்துக்கொள்ளார்.
கண்ணால் கண்டதே மெய் எனும் அவர் கருத்து,
புலனறிவின் அடிப்படையிலேயே
அவர்கள் உண்மையை ஒப்புவர் என்பதற்காம் சான்று.
இக்கருத்துடைய இவர்கள்
பூதங்கள் ஐந்து எனும் கருத்தினையே மறுத்து நிற்பர்.
இவர்களைப் பொறுத்த வரையில் பூதங்கள் நான்காம்
நிலம், நீர், தீ, காற்று எனும் காட்சிக்கு உட்படும் பூதங்களை ஏற்றுக்கொள்ளும் இவர்கள்;
காட்சிக்கு உட்படாத ஆகாயத்தை பூதம் என ஒப்ப மறுப்பர்.
ஊக அறிவுக்கோ, உயர்ந்தோர் சொல்ல ஒப்பும் அறிவுக்கோ
இவர்கள் அகராதியில் இடமில்லை.

வழி வழி வந்த இக்கடவுள் மறுப்புக்கொள்கையாளரின் வலிமை
மார்க்ஸிசக் கொள்கையாலும், திராவிட இயக்கங்களின் வருகையாலும்
சென்ற நூற்றாண்டில் கூர்மையுற்று
இந் நூற்றாண்டிலும் தொடர்கின்றது.

எப்போதும் எது ஒன்றையும் இல்லையென மறுப்போர் கொள்கை சுலபமானது
எந்த ஒன்றையும் இல்லையெனச் சொல்வதற்கு அறிவு தேவையில்லை.
இருக்கிறது எனச் சொல்வதற்கே அறிவும் தேடலும் அவசியமாகின்றன.
தேடலும், அறிவும் அவசியமற்ற வாதத்தன்மை,
இக்கடவுள் மறுப்புக் கொள்கையாளர்கள் வலிமையுறும் காரணங்களுள் முக்கியமான ஒன்றாகும்.

நவீன இறைமறுப்புக் கொள்கையாளர்கள்
பெரும்பாலும் விஞ்ஞானக் கருத்தின் அடிப்படையி லேயே
தமது இறைமறுப்புக் கொள்கையை முன்வைக்கிறனர்.
எதையும் கற்பனைக்கு இடமின்றி , பகுத்தறிந்து
காரண காரியத் தொடர்புகளோடு உரைப்பது வே
விஞ்ஞானம் என்பது இவர் தம் உறுதியான கொள்கை
அதனால் தம் கடவுள் மறுப்புக் கொள்கையினை
பகுத்தறிவு வாதம் என்றே இவர்கள் உரைத்து வருகின்றனர்.
விரிந்து கிடக்கும் விடயங்கள் அனைத்தும்
மனித அறிவுக்கு அகப்படும் என்பது
இவர் தம் அசையாத நம்பிக்கை.
இவ்வடிப்படையிலேயே,
பெரும்பாலும் ஊக அறிவால் உணரப்படும்
இறைக் கொள்ளையை இவர்கள் மறுக்கின்றனர்.
இவர் தம் முடிவு சரியானதா?
விஞ்ஞானம் , அறிவின் எல்லைகளை அளவிடக்கூடியதா?
இன்றைய விஞ்ஞானம்
அனைத்துக் கோள்விகளுக்கும் விடையளிக்கும் ஆற்றல் கொண்டதா?

⟶

பகுத்தறிவால் விடை பகர முடியாத வினா ஏதும் இல்லையா?
காட்சிப் பிரமாணத்தைக் கடந்த உண்மைகள் இன்றும் இருக்கின்றனவா?
இன்றைய வளர்ச்சி நிலையிலும் விஞ்ஞானத்தைக் கடந்த விடயங்கள் இல்லையா?
ஆராய்வது அவசியமாகின்றது.
ஒரு பொருளைத் தாங்க இன்னொரு பொருள் வேண்டும்.
இது விஞ்ஞானம் ஒப்பும் ஓர் அடிப்படை உண்மை.
பொருள் என்பது எல்லைகளைக் கொண்டது.
இஃதுவும் அங்ஙனம் ஏற்பட்ட
உண்மைகளில் ஒன்று
இவ்வடிப்படைகளைக் கொண்டு
விஞ்ஞான நிரூபணம் செய்வார் மேல்,
ஆத்திகவாதிகளால் ஒரு வினா தொடுக்கப்படுகின்றது.

ஆகாயம் ஒரு பொருளா? அன்றா?
இதுவே அவ் எளிய வினா.
பகுத்தறிவால் இவ் வினாவுக்கு வரையறுத்து விடை கூறுதல் கூடுமா?
எவ்வளவு வலிமை பெற்ற வராயினும்
இவ்வினாவுக்கு விடையளித்தல் ஆகாதாம்
எங்ஙனமோ எனின்
ஆகாயம் பொருள் அன்று எனின்
அவ் ஆகாயத்தில் இவ் அண்டங்கள் எங்ஙனம் நிலைக்கின்றன?
இவ்வினா அவர்களைத் திகைப்பிக்கும்
அன்று! ஆகாயம் பொருளே என அவர்கள் உரைப்பின்,
பொருள் எனின் அது எல்லைக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
அங்ஙன மாயின் ஆகாயத்தின் தொடக்க முடிவு எல்லைகள் எவை?
ஆகாயம் எங்கு தொடங்குகின்றது? எங்கு முடிகின்றது?
இவ் வினாக்களுக்கு விடையளிக்க வல்லார் விஞ்ஞான உலகில் உளரா?
இங்ஙனமாய் இவ்விறை மறுப்புக் கொள்கையாளரை
தர்க்க அறிவு கொண்டே திகைக்கச் செய்யலாம்.

அங்ஙனமன்றி அவர்தம் நம்பிக்கை வேரான
விஞ்ஞான அறிவின் நம்பகத்தன்மையை, அசைத்துக் காட்டின்
உறுதியாய் எண்ணி அவர்கள் கட்டிவைத்திருக்கும்
பகுத்தறிவுவாதம் சிதறிப்போகும்.
அதை நிரூபித்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

விஞ்ஞானம், விஞ்ஞானமென இன்றைய அறிவியலார் உரைக்கும்
அறிவு நிலை மூன்று பெருங்கூறாய் விரித்துரைக்கப்படுகின்றன.
உயிரியல், இரசாயனம், பௌதிகம் என்பனவே
அவர்தம் விஞ்ஞானத்தின் அடிப்படைப் பெருங் கூறுகளாம்.

இவ் விஞ்ஞானக் கூறுகள் வளர்ச்சியுற அடிப்படையாவது கணிதமே.
கணிதம் இன்றேல் ஆய்வுகள் இல்லை.
இக்கணிதத்தின் அடிப்படையாய்க் கருதப்படுபவை
ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களேயாம்
இஃதினை அறிய, விஞ்ஞானத்தின் அடிப்படை
உயிரியல், இரசாயனம், பௌதிகம் என்பதும்
அவற்றின் அடிப்படைக் கணிதம் என்பதும்
அதனது அடிப்படை எண்கள் என்பதும்
தெற்றெனத் தெளிவாகும்.

## உணவு உண்ணும்போது...

ஆயுளை விரும்புகிறவன் கிழக்கு முகமாகவும்;
கீர்த்தியை விரும்புகிறவன் தெற்கு முகமாகவும்;
செல்வத்தை விரும்புகிறவன் மேற்கு முகமாகவும்;
சத்தியத்தை விரும்புகிறவன் வடக்கு முகமாகவும்;

உட்கார்ந்து சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது அதிகமாகப் பேசாமல் தெய்வ சிந்தனையோடு இருக்கவேண்டும்.

**- தர்ம சாத்திரம்**

"சனாதன சாரதியில்"யில் இடம்பெற்ற பகவான் சத்ய சாயி பாபா அவர்களின் தெய்வீக அருளுரையை நன்றியுடன் மறுபிரசுரஞ் செய்கின்றோம்.

# "உனக்கு அளித்துள்ள வரங்களுக்காக கடவுளிடம் நன்றியுடன் இருப்பாயாக!"

மாணவர்கள் இன்றைய காலகட்டத்திற் பல்வேறு துறைகளிற் கல்வியறிவு பெறுகிறார்கள். அவர்கள் கல்வி மேம்படுவதுபோல், கூடவே அவர்களது ஆசைகளும் மேம்பட்டு நிற்கின்றன. பேச்சளவில் 'ஹீரோ'க்களாகவும்; செயல்முறையில் 'ஜீரோ'க் களாகவும் இருக்கின்றனர். தான் பெற்ற கல்வியறிவின் ஒரு சிறு பகுதியைக்கூட நடைமுறைப்படுத்தாவிடில், அந்தக் கல்வியால்தான் என்ன பயன்?

மாணவர்களே! தற்கால கல்வியானது உலக சௌக்கியங் களைப் பெறுவது என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சமூக நல மேம்பாடு, தர்மத்தை நிலைநாட்டுதல், உலக அமைதியை மேம்படுத்துதல் போன்றவற்றைக் குறிக்கோளாகக் கொண் டுள்ளதே இல்லை.

**உங்களது கல்வியைச் சமூகநலமேம்பாட்டிற்கு உபயோகப் படுத்துங்கள்.**

கல்வியறிவு பெற்ற மனிதர்கள் இப்பொழுதெல்லாம் நிறைய ஊதியம் பெற்றுத்தரும் வேலையையே பெரும்பாடுபட்டுத் தேடுகின்றனர். வேலை பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கருதுவதால், அவர்கள் தங்களது கல்வியைத் தங்களின் சுய வசதிகளுக்காக மட்டுமே பயன்படுத்துகின்றனர். நாடு முன்னேற அவர்கள் ஒன்றும் செய்வதில்லை! காலையில் அலுவலகங் களுக்கோ, கல்லூரிக்கோ சென்று மாலை திரும்புகின்றனர். உடைமாற்றிக்கொண்டு, அமைதியையும், சந்தோஷத்தையும் நாடி, புத்துணர்ச்சி மையங்களுக்கு (Recreation Clubs) செல்கின்றனர். ஒரு கிளப்பில் (Club) ஓய்வும் அமைதியும் கிடைத்துவிடுமா? இல்லவே இல்லை. கிளப் என்பது, கல்வியறிவு பெற்றதாகக் கருதப்படும் படித்தவர்களின் பலவீனம்தான்! அமைதியும், சுகமும் கிளப்பில் கிடைப்பதாக ஒரு மாயையில் இருக்கிறார்கள். கிளப்பிற் கிடைப்பதைவிட; வீட்டில் படுத்து ஓய்வெடுத்தாலே ஓய்வும், அமைதியும் கிடைத்துவிடும். அமைதிக்கும் ஓய்வுக்கும் கிளப்பில் என்ன செய்கிறார்கள்? மது அருந்துவதிலும், சீட்டு விளையாடுவதிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். மது அருந்தித் தன் உணர்வுகளை இழக்கும்போது தங்களுக்கு ஓய்வும், அமைதியும் கிடைத்து விட்டதாக ஒரு மாயையிற் சிக்கிவிடுகின்றனர். இது ஒரு மேன்மை யான வழியாகுமா என்ன? கற்றவர்களுக்கு ஏற்ற வழியா இது? இந்த வழியைப் பின்பற்றுபவர்கள், தாங்கள் கற்ற கல்வியிற் குறைபாடு உள்ளவர்களே ஆவர். இத்தகைய குழப்பம் அவருக்கு மட்டுமின்றி, அவர் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும்கூடக் கேடு விளைவிப்பதாக ஆகிறது.

இத்தகைய தீய பழக்கத்திற்கு இரையாவதைவிடுத்து, ஒருவன் தன் கல்வியைத் தன் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் பயனுடையதாகச் செய்யவேண்டும். இந்தக் குடிப்பழக்கம் ஒருவனை எங்கு கொண்டு விடுகிறது? முதலில் மனிதன் குடியைக் குடிக்கிறான். பிறகு குடி மனிதனைக் குடித்துவிடுகிறது. இத்தகைய உண்மையைப் புரிந்துகொள்ளாமல், கற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிபவர்கள் இத்தகைய கொடிய வழியில் செல்வதோடு தாங்கள் புத்திசாலிகள் என்ற மாயையில் இருக்கிறார்கள். நண்பர்களுக்கு நன்மை செய்வதாக நினைத்து, அவர்களுக்குக் குடியிலும், சீட்டு விளையாட்டிலும் 'கம்பெனி' கொடுக்கிறார்கள்.

இவ்வாறு தங்களையும் சேர்த்துக்கொள்வதற்கு நன்றி வேறு கூறுகிறார்கள். குடிப்பதற்குமுன் தங்களது கோப்பைகளை ஒன்றோடொன்று மோதி "சியர்ஸ்" என்று வேறு கூறிக்கொள்கி றார்கள். என்ன மட்டமான பழக்கம் இது? அவர்களது கல்வியின் குறைபாட்டையே கூட்டுகிறது. இது படித்தவர்களின் அடை யாளமே அல்ல.

**கடவுளுக்கு வரி செலுத்துங்கள்**

எவரேனும் உங்களை நலன் விசாரித்தால் நீங்கள் உடனே அவர்களுக்கு நன்றி சொல்கிறீர்கள். கீழே விழுந்த கைக் குட்டையை யாரேனும் எடுத்துக் கொடுத்தால், அதற்குக்கூட நன்றி சொல்கிறீர்கள். நீர் உபயோகிப்பதற்கு முனிசிபாலிடிக்கு வரி செலுத்துகிறீர்கள். மின்சாரம் உபயோகத்திற்கு வரி செலுத்துகிறீர்கள். உங்களது நிலத்தில் வீடு கட்டிக்கொள்ள அனுமதி வழங்கியமைக்காக வீட்டு வரி கட்டுகிறீர்கள். ஆனால் எவ்வளவோ அற்புதமான வளங்களைக் கொடுத்துள்ள கடவுளுக்கு நாம் ஏதேனும் வரி செலுத்துகிறோமா? அல்லது நன்றியாவது தெரிவிக்கிறோமா? மின் விசிறி உபயோகித்தால் அதற்குக் கட்டணம் கட்டுகிறீர்கள். இவ்வளவு பெரிய வாயுமண்டலத்தைத் தந்துள்ள இறைவனுக்கு என்ன வரிகட்டுகிறீர்கள்? உலகம் முழுவதற்கும் ஒளியை அளிக்கும் சூரியனுக்கு என்ன வரி கட்டுகிறீர்கள்? பூமியில் உள்ள நீர் நிலைகள், குளங்கள், ஆறுகள், ஏரிகள் இவற்றை மழை நீரால் நிரப்பும் இறைவனுக்கு என்ன வரிகட்டுகிறீர்கள்? உங்களது சாதாரண தேவைகளை நிறைவேற்றும் அரசாங்கத்துக்கு வரி கட்டுகிறீர்கள். ஆனால் கடவுள் உங்களுக்குத் தருவது எல்லாமே இலவசம்! காற்று இலவசம், வெளிச்சம் இலவசம், நீர் இலவசம், அவர் அளிக்கும் எல்லாமே இலவசம். இவ்வுலகம் முழுவதும் இறைவனின் நன்கொடை; 30x40 சதுர அடிகொண்ட ஒரு சிறிய மனைக்குக்கூட நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொகை சொத்துவரி கட்ட வேண்டி உள்ளது.

இறைவன் அளித்த பரிசுகளையெல்லாம் அனுபவிக்கிறீர்கள். ஆனால் என்ன அவனுக்குத் திரும்ப அளிக்கிறீர்கள்? யாரேனும் ஒருவர், சிறந்த கல்வி கற்றவர்கூட யாரேனும், இதைப்பற்றி நினைத்ததுண்டா? அற்பமான, நிலையற்ற, இகலோகத்திற்கு மட்டுமேயான விஷயங்களுக்கெல்லாம் நீங்கள் வரிகளும் செலுத்தி, நன்றியையும் தெரிவிக்கிறீர்கள். ஆனால், கடவுளின் அம்சம் →

பொருந்திய பஞ்சபூதங்களுக்காக நமக்கு வழங்கப்பட்ட, வாழ்க்கைக்கு ஆதாரமான மூலக்கூறுக்கு நாம் நன்றி செலுத்துகிறோமா? ஏற்கனவே அவன் நமக்கு அளித்தவைக்கு நாம் நன்றி செலுத்துவதில்லை. இன்னும் "அதைத்தரவில்லை. இதைத் தரவில்லை" என்று இறைவனையே விமரிசிக்கிறோம். இது முற்றிலும் பேராசை அல்லவா? மேலும் மேலும் இறைவனிடம் எதிர்பார்த்துக் கேட்பது பேராசை அல்லவா? பேராசைதான் பல கொடிய குணங்களுக்கு வழிவகுக்கிறது. பேராசை, அஹங்காரம், கொடூரம் இவை மனிதனின் இயற்கையான குணம் அல்ல. மனிதனுடைய குணங்கள். அமைதி, சகிப்புத்தன்மை, இரக்கம் மற்றும் தன்னிறைவுதான். உண்மையில் கூறப்போனால் மனிதன் உள்ளதை வைத்துத் திருப்தி அடையவேண்டும். அவன் இறைவனுக்கு எப்பொழுதும் நன்றி உடையவனாக இருத்தல் வேண்டும். ஒருமுறை ஒரு பக்தன் ஸ்ரீமன் நாராயணனிடம் சென்று பின்வருமாறு தனது நன்றியைத் தெரிவித்தான். "ஓ பிரபு! மேரு என்னும் தங்க மலையைப் படைத்துஇருக்கிறாய்! மனிதரை வளமுறச் செய்வதற்காகவே படைத்து இருக்கிறாய்! அதோடு மட்டுமின்றி அடர்ந்த காடுகளைப் படைத்து, கரியமில வாயுவை உட்கிரகித்து மனிதனுக்கு வேண்டிய பிராண வாயுவை மனிதனுக்கு அளிக்குமாறு செய்துள்ளாய்! நீர் தாங்கி வரும் மேகங்களைத் தடுத்து மழை பொழியச் செய்யக்கூடிய பெரிய பெரிய மலைகளைத் தோற்றுவித்துள்ளாய்!"

*கைலாச நாதன் பிறை தாங்கிய*
*தலையுடன் அவதரித்தான்!*
*அவன் சிரசினின்று குளுமையான*
*தண்ணீர் பிரவாகித்து ஓடி வருகிறது!*
*நடுவில் ஒளி நிறைந்த கண்ணோடு*
*கூடிய நெற்றியும், நீலமான*
*கழுத்தும், நாவல் பழக்கொத்துப்போல்*
*பளபளக்கின்றன!*
*கைகளில் கடகம் போலும் இடுப்பில்*
*ஒட்டியாணம் போலும்*
*நாகாபரணம் அணிந்துள்ளான்*
*நெற்றியில் குங்குமப் பொட்டு உடல்*
*முழுவதுமோ விபூதிப் பூச்சு! அவனது*
*அதரங்கள் தாம்பூல ரசத்தால் சிவந்துள்ளன!*
*வைரங்கள் பதித்த சாதனங்கள் காதுகளில்*
*ஆடுகின்றன! அவனது முழு உடலும்*
*தெய்வீக ஜோதியாகப் பிரகாசிக்கின்றது.*

(தெலுங்கு கவிதை)

இத்கைய தெய்விக ஒளி வீசும் இறைவனின் உருவம் உலகம் முழுவதற்கும் அழகைத் தோற்றுவிக்கின்றது. சிவன் பிறைச்சந்திரனைத் தலையிற் சுமந்துள்ளான். அதனாற்றான் உலகம் முழுவதும் குளுமையான ஒளியைப் பெற முடிகிறது. அவனது சடைமுடியினின்று பிரவாகிக்கும் கங்கையோ, நதியாகப் பாய்ந்து, கிளைகளாய் பிரிந்து பரந்து நிலப்பரப்பைச் செழுமை யாக்கி மகிழ்ச்சி, வளம், முன்னேற்றம் தருகின்றது. இத்தகைய வரப்பிரசாதத்தை எண்ணிப் போற்றாமல் மனிதன் அழியக்கூடிய நிலையற்ற பொருட்களைக் கேட்கவே விழைகிறான். கடவுள் இறைவனுக்கு இதயத்தை அளித்துள்ளான். எத்தகைய இதயம்? அன்பும், பிரியமும், குளுமையும், இரக்கமும் நிறைந்த இதயத்தை அளித்துள்ளான்! ஆனால் மனிதன் அதை மாசுபடுத்திக் கெடுக்கிறான். இப்படிப்பட்ட ஒரு புனிதமான இதயத்தைக் களங்கமுறச் செய்வதும், புனிதமற்றதாக ஆக்குவதும் மனித குலத்திற்கே இழுக்கு!

இறைவன் தமக்கு அளித்துள்ள வரன்களுக்காக, மனிதன் அவருக்கு "வரி" செலுத்தியே ஆக வேண்டும். பழைய காலத்து முனிவர்கள் இதைத்தான் "பலி" என்றனர். அதாவது இறைவனுக்கு நன்றியுணர்வை அர்ப்பணித்தல். ஆனால் மக்கள் இதைத் தவறாகப் புரிந்துகொண்டு, மிருகங்களைப் பலி இடுவதாகப் பொருள் கொண்டு விடுகின்றனர். "பலி" என்ற சொல்லுக்கு மிருகபலி என்று பொருள் அல்ல. நன்றி தெரிவித்தல் என்பதே பொருள். ஒரு வார்த்தைக்குப் பல பொருள்கள் உள்ளன. "சிகண்டி" என்பதன் பொருளை எடுத்துக்கொள்ளுங்கள். ஆணுமற்ற பெண்ணுமற்ற நிலையைச் சிகண்டி என்கிறீர்கள். ஆனால் அது ஒன்று மட்டும் பொருள் அல்ல; கிருஷ்ணருக்கும் நாராயணனுக்கும்கூட சிகண்டி என்ற பெயர் உண்டு. மயில் பீலியைத் தாங்கிய கிரீடத்தைத் தலையில் அணிந்தவன் என்று பொருள். உள்ளார்ந்த பொருளை அறியாமல் தவறான பொருளை எடுத்துக்கொண்டு அதையே உண்மையென்று நம்பவும் ஆரம்பித்து விடுகிறீர்கள். அதேபோன்று "பலி" என்ற சொல் மிருகங்களைக் கொன்று பலியிடுதல் என்று பொருள்படாது. ஆனால் இறை வனுக்கு நன்றியைச் செலுத்துதல் என்று பொருள்படும். எப்படி இறைவனுக்கு நன்றி செலுத்துவது? இதயத்தின் ஆழத்தில் இருந்து அது வரவேண்டும்; மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தும் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் உண்மையையே பேசுவது என்பதும் ஒரு வகையில் இறைவனுக்கு நன்றியுடன் வரி செலுத்துவதுபோன்று தான்.!

*ஹாஸ்தஸ்ய பூஷணம் தானம்,/*
*ஸத்யம் கண்டஸ்ய பூஷணம்//*

(சமஸ்கிருத ஸ்லோகம்)

(கைக்கு உண்மையில் அழகு தருவது தானதர்மம் ஆகும்; உண்மை பேசுதல் தான் நிஜமான (நெக்லஸ்) கழுத்தாபரணம்)


தர்மகாரியங்களைச் செய்வதன்மூலமும், உண்மை பேசுவதன் மூலமும் இறைவனுக்கு நன்றி தெரிவியுங்கள். பாகவதத்தில் இதே உண்மைதான் போதனா என்பவராற் சொல்லப்பட்டுள்ளது. இறைவனை வணங்குவதற்குக் கரங்களையும், அவனைப் பாடுவதற்குத் தொண்டையையும் உபயோகிக்காவிடில் மனிதப் பிறவியின் பயன்தான் என்ன? மற்றவர்கள் என்ன சொன்னாலும் அவன் புகழ் பாடுவதை விடக்கூடாது. அகங்காரத்தையும் கர்வத்தையும் விட்டுவிட்டுப் பாடவேண்டும். மற்றவர்கள் பரிகசித் தாலும், கிண்டல் செய்தாலும் அதைப் பொருட்படுத்தக்கூடாது. சிலர் இனிமையான குரல் இருந்தும் இறைவனைப் பாட அந்தக் குரலை உபயோகிப்பதில்லை. பிறகு அந்தக் குரலால் என்ன பயன்? நாக்கால் என்ன பயன்? எதை எதையோ பேசுவதற்கு மட்டும்தான் நாக்கா? தவளையின் நாக்கைப் போன்றதுதானா உங்களுடை யதும்? உங்களுக்குப் பேசக்கூடிய நாக்கை அளித்திருப்பது ஒரு வரம். அது இறைவனைப் பாடுவதற்காகவே! எனவே, அவன் புகழ்பாடி அவனுக்கு வரி செலுத்துங்கள். இல்லையேல் நீங்கள் இறைவனுக்குட்பட்டிருக்கும் கடனிலிருந்து வெளிவர முடியாது. இறைவனை வணங்குவதற்காக குவியாத கரங்கள் இருந்தும் என்ன பயன்? 10 விரல்களையும் இணைத்து, புலன்களின் இசைவின் அடையாளமாக வைத்து, இறைவனுக்குப் பிரார்த் தனைகளைச் செய்யவேண்டும். அதுதான் நீங்கள் இறைவனுக்குச் செலுத்தும் வரியாகும். இவ்வாறு வரி செலுத்தாதவரை நீங்கள் என்றும் இறைவனுக்குக் கடனாளி யாகவே இருப்பீர்கள்.

நூலகம்

**வரலாற்றுப் புகழ்பெற்ற காரைநகர் சிவன்கோவில் என்ற ஈழத்துச் சிதம்பரத்தில் அடுத்த மாதம் ஆறாந் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.**

# புண்ணியப் பேறு மோங்கும்

-சிற்பி-



ஆண்டியாம் அடியாரின் அற்புதக் கனவிலே
ஐயப்பன் அன்று தோன்றி
ஈண்டிருக் கும்கேணி யுள்ளே யிருக்கிறேன்
எடுத்தால யம்சமைப்பாய்
வேண்டிடும் பணியெலாம் அம்பலவி முருகனும்
விருப்புடன் செய்து தருவான்
காண்பவர் கேட்பவர் கனிந்துளம் உருகிடும்
காலம்மு கிழ்க்கு மென்றான்.

ஐயப்பன் அருளினா லமைந்தநற் கோவிலில்
ஆகமம் சொல்லு முறையில்
செய்தனர் பூசைகள் திருவிழா பொங்கலும்
திருவருட்பேறு பெற்றார்
செய்தவப் பயனெனச் சிந்தையில் எண்ணியே
சிறப்புடன் திட்ட மிட்டே
மெய்யடி யாரெலாம் மேலும் நற் பணிகளை
விரைவாய் முடித்து வைத்தார்.

வருடங்கள் சிலநூறு கடந்துள்ள கோயிலில்
வரமீயும் சக்தி யெல்லாம்
திரண்டுநம் சிவனாதி தெய்வமாஞ் சிலைகளாய்த்
திகழும் சிறப்பு உண்டு
அருளென்ற அமுதினை அனுதினம் பருகிடும்
அனுபவச் சிறப்பு உண்டு
பெரும் புகழ் சேரீழத் துச்சிதம் பரமெனும்
பிறிதோர் சிறப்பு முண்டு.

திருமந்திரம் தந்த திருமூலர் சிவபூமி
எனச்சொன்ன இந்த நாட்டில்
அருள் சிந்து நடராஜர் ஆனந்த நடமாடும்
ஆரீழச் சிதம்ப ரத்தில்
வரம் பெற்ற அடியார்கள் மனமொன்றி மேற்கொண்ட
பணிகள் நிறைந்த நாளில்
பெருஞ் சாந்தி யென்றபுன ராவர்த்தனக்கும்ப
அபிஷேகம் பேறு காண்போம்.

அருளோங்கு மீழத்துச் சிதம்பரர் கோவிலை
அடைவார் வணங்கு வார்க்கே
திருவோங்குஞ் சீரான செயலோங்குந் தீதற்ற
சிந்தனை என்று மோங்கும்
உருவோங்கும் முள்ளத்தின் நிலை யோங்கும் உயர்வான
வாழ்க்கையையுஞ் சேர்ந்து ஓங்கும்
பொருளோங்கும் புனிதரின் பொற்பாதஞ் சேர்கின்ற
புண்ணியப் பேறு மோங்கும்.

*Edited & Published by Mr.S.Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai, No.450, K.K.S. Road, Jaffna & Printed at Harikanan Printers, No.424, K.K.S. Road, Jaffna. 15.05.2011 (1st Day of Vaikasiththingal). Phone: 021 222 7678, 0213202191*